உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 25 வியாழக்கிழமை (08-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:163

# பேச்சைக் காட்டி, நிதியைத் திரட்டி தெற்கை வளர்க்க அரசு முயல்கிறது!

## அகாஷியிடம் தலைவர் பிரபா விளக்கம்

கிளிநொச்சி,மே8

**மனிதாபிமான அடிப்படையைக் கொண்ட எமது மக்களின் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு அரசு தனது நலன்களிலேயே கவனம் செலுத்துகிறது. இங்கு ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையை ஒரு பிரசாரமாகக் கொண்டு, உலக நாடுகளிடம் உதவிகளைப் பெற்று அதன் மூலம் தென்னிலங்கையை வளர்க்கவே அது முயற்சிக்கின்றது.**

**இலங்கை விவகாரங்களுக்கான ஜப்பானின் சிறப்புத் தூதர் யசூசி அகாஷியிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.**

விசேட தூதர் அகாஷி, இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் சிசறோ ஒட்சுகா ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்று நேற்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் சுமார் இரண்டுமணி நேரம் இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பின்போது ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியிடம் தலைவர் பிரபாகரன் கூறியதாவது:-

கடந்த ஐம்பது வருட காலமாக தமிழ்மக்கள் தொடர்ச்சியாக பல தடவைகள் அரசுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். பல பேச்சுக்களில் பங்குபற்றி இருக்கின்றார்கள். ஆனால், எந்த ஓர் அரசும் எமது மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உருப்படியான

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளின் நகர்வுக்கு டோக்கியோ மாநாடு முக்கியமானது!

## விசேட தூதர் அகாஷி கருத்து



கிளிநொச்சி,மே8

சமாதான முயற்சிகளை உத்வேகப்படுத்துவதில் டோக்கியோ மாநாடு முக்கியமானது. எனவே, அதில் இருதரப்பையும் பங்குபற்றச் செய்வதை இணங்க வைக்க நாம் முயற்சிக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜப்பானின் விஷேட தூதர் யசூசி அகாஷி.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

உலக வங்கியின் கீழ் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியத்தை ஸ்தாபித்தல், சிரான் உபகுழு செயற்பாட்டை வலுப்படுத்துதல் உட்பட பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்குரிய வழிவகைகள் குறித்து நாம் ஆராய்ந்தோம்.

புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளில் எழுந்துள்ள பிரச்சினைகள், நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகளின் நிலைமை, இணக்கம் காணப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதில் உள்ள இழுபறிகள், மக்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு ஆகியவை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் விரைந்து ஆரம்பிப்பதில் இலங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு போய்ச் சேர்ந்த கையோடு பிரதமருடன் அகாஷி அவசர பேச்சு!

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சு நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய கையோடு ஜப்பானிய விஷேட தூதர் யசூசி அகாஷி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் நேற்று இரவு 7.15 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சு நீண்டநேரம் தொடர்ந்ததாகத் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தம்மிடம் தெரிவித்த விடயங்களை விரமாக அவர் பிரதமரிடம் எடுத்துக் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர் அகாஷி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:-

எக் காரணம் கொண்டும் உதவி வழங்கும் மாநாடு ஒத்திவைக்கப்படமாட்டாது. திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதியில் மாநாடு இடம்பெறும். கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று பிரபாகரன் என்னிடம் கூறினார். அதைப் பிரதமரிடம் எடுத்துக்கூறி நல்ல முடிவு ஒன்று எட்ட முயற்சிப்பேன் என்றார் அகாஷி. (ஐ-3)

# பொதுமக்களின் கட்டடங்களிலுள்ள படைமுகாம்கள் இடம்மாற்றப்படும்!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

கொழும்பு,மே8

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் இயங்கிவரும் இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதென அரசு தீர்மானித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் இவ்வாறான 152 முகாம்களை 88 இடங்களுக்கு இடம்மாற்றம் செய்யப்போவதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

இலங்கை வானொலி நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவகையில் இந்த நடவடிக்கைகள் அமையும் என்றும் - வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலையை ஏற்படுத்தும் வகையில் உயர் பாதுகாப்பு வலயங்களின் விஸ்தீரணம் குறைக்கப்படும் எனவும் -

அமைச்சர் திலக் மாரப்பன மேலும் கூறினார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ-4)





ஜப்பானின் விசேட தூதர் அகாஷி நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தார். தலைவர் பிரபாகரன் அவரை கைலாகுகொடுத்து வரவேற்பதை முதல் படத்திலும் அவருக்கு நினைவுப் பரிசு ஒன்றை பிரபாகரன் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(மேலும் படங்கள் 8ஆம் பக்கத்தில்)*

# எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சி வருகின்றார்

கிளிநொச்சி,மே8

நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சிக்கு வருகின்றார்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரை அவர் முற்பகல் 10 மணிக்கு சந்திப்பார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து அவர் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொல்ஹெய்முடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரிக்வே டெலிவ்சன, நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ரீசர் ஆகியோரும் வருகின்றனர். (ஐ-3-4)

# சதீஷ் நம்பியாரின் அறிக்கை பிரதமரிடம் நாளை சமர்ப்பிப்பு

கொழும்பு,மே8

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான தனது ஆலோசனை அறிக்கையை இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியார் நாளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிப்பார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்த சதீஷ் நம்பியார் அங்கு ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும்போதே மேற்படி தகவலைத் தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ, முப்படைத் தளபதிகள், கடல் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுக்கு ஆலோசனை வளங்குவதற்கு இந்தியாவில் இருநது வந்துள்ள அந்நாட்டின் முன்னாள் கடற்படை பிரதித் தளபதி ஜேக்கப் ஆகியோரும் பங்குபற்றினர்.

சதீஷ் நம்பியார் அங்கு பேசுகையில், இலங்கை ஆயுதப்படைகள் தொடர்பான எனது கருத்துக்களும் யோசனைகளும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெறவேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும். அதை ஆழமாகப் புரிந்து கொண்டே நான் செயற்படமுனைகிறேன்.

சமாதான முயற்சிகளுக்கான பல்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் பதில் ஆக்கபூர்வமாக இருந்தால் எங்கள் முடிவும் சாதகமானதாக இருக்கும்!

## அடுத்தவாரம் மிக முக்கியமானது என்கிறார் பாலசிங்கம்



கிளிநொச்சி,மே8

எமது தலைவர் தெரிவித்த விடயங்களை அகாஷி பிரதமரிடம் தெரிவிப்பார். வரும் ஒருவார காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அவர் கவனிப்பார். எனவே, அடுத்தவாரம் மிக முக்கியமானதாகின்றது.

அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில் நாங்கள் சாதகமான முடிவை எடுப்போம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷிக்கும் இடையே நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற பேச்சு தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்த போது பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

*கேள்வி:-* 'சிரான்' அனுமதித்த 15 திட்டங்களையும் உடன் நடைமுறைப்படுத்துமாறு பிரதமர் உத்தர விட்டுள்ளார். பிரதமரின் உத்தரவுக்கும் சிரான் திட்டத்துக்கும் தொடர்பு இருக்கின்றதா?

*பாலா:-* திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவோம் என்று கூறினால் மட்டும் அவை நிறைவேறா. அதற்கு உரிய நிதி ஒதுக்கப்பட்டதா? அது யார் மூலம் ஒதுக்கப்பட்டது? இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிதியமே இன்றும் செயற்படவில்லை. நிதியத்துக்கு இன்னமும் சட்ட அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதில் சிக்கல் இருப்பதாக சட்டமா அதிபர் கூறியுள்ளார். அது ஒரு பிரச்சினை.

சிரான் திட்டத்தை யார் நடைமுறைப்படுத்துவது என்றாலும் பிரச்சினை இருக்கிறது. 15 திட்டங்களையும் ஒவ்வோர் அமைச்சிடமும் வழங்குவதாக இருந்தால் அது சாத்தியம் இல்லை. அமைச்சுக்கள் எல்லாம் ஊழல் நிறைந்த அமைச்சுக்கள். அத்தகைய அமைச்சுக்களிடம், நிதியை ஒதுக்கி, நடைமுறைப்படுத்தும்படி கூறினால், ஒன்றுமே நடக்காது. அங்கு இருக்கும் அமைச்சர்கள் காசை விளையாடிக் கொண்டுபோவார்கள். அல்லது நிர்வாக அதிகாரிகளிடம் அந்தப் பணம் போகும்.

காலங்காலமாக இலங்கையில் உள்ள பிரச்சினை என்னவெனில், திட்டங்கள் போடுவார்கள்; தீர்மானங்கள் நிறைவேற்றுவார்கள்; நிதி ஒதுக்கப்படும். நிதி அந்த அமைச்சர்களிடமும் போகும். ஆனால், அந்த அமைச்சுக்குப் போகும் நிதி அமைச்சர்களின் 'பொக் கெட்'டுக்குள்ளும், அதிகாரிகளின் 'பொக்கெட்டு'க்களுக்குள்ளும் போகும். மக்களிடம் சென்றடையாது.

இப்படியான நடைமுறையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களுக்குத்தேவை உருப்படியான திட்டங்கள் உரியமுறையில் நிறைவேற்றப்படவேண்டும் என்பதே. நேர்மையான முறையில் இவை நிறைவு செய்யப்பட வேண்டும். இதனால் மக்கள் பயன் அடையவேண்டும்.

பேச்சுக்களில் இருந்து விலகும் நோக்கம் எமக்கு இல்லை. யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கமும் எமது இயக்கத்துக்கு இல்லை. சமாதானத்தை தொடர்ந்து இறுக்கமாகக் கடைப்பிடித்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அரசுக்கும் உலகுக்கும் நாங்கள் அழுத்தங்களைப் போட்டு, நிதியைப் பெற்று, மக்கள் பயன் அடையக்கூடிய முறையில் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனெனில், மக்களும் காத்துக்காத்து விரக்தியடைந்து எங்கள் மீதும் அதிருப்தியடைந்த நிலையில் இருக்கின்றனர்.

இந்தப் பேச்சுக்கள் பயனுள்ளதாக அமையவேண்டுமாயின், உருப்படியான செயல் திட்டங்களைப் போட்டு, உடன் செயற்படுத்தவேண்டும்.

*கேள்வி:-* ஜப்பானின் விசேட தூதர் அகாஷிக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் குறித்து விவரங்களை விளக்குவீர்களா?

*பாலா:-* அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் ஜப்பானில் நடக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகள் பங்குபற்ற வேண்டும் என்றும் அகாஷி எம்மிடம் கோரினார். இந்தக் கோரிகையை தீவிரமாக ஆராய்வதாக அவரிடம் கூறி யுள்ளோம்.

அதேவேளை, நடைபெற்றுமுடிந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என் பதை நாம் எதிர்பார்ப்பதாக அவரிடம் கூறினோம். அந்த விடயங்களை விரைவாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அகாஷியிடம் கோரினோம்.

சிரான் உபகுழுவின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படவேண்டும். சட்டரீதியாகவும் உரிய முறையையும அதனை ஸ்தாபிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் உதவும் நாடுகளின் சமூகத்தின் நிதியை சிரான் குழு சரிவரப் பயன்படுத்த முடியும்.

அதில் சில சட்டச் சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனை உடனடியாகக் களைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இடம்பெயர்ந்த எமது மக்கள் பத் தாண்டுகளுக்கு மேலாக அவலங்களை அனுபவித்து வருகின்றார்கள். அவர்களின் பிரச்சினையை மனிதாபிமான விவகாரமாகக் கருதாமல் அதற்கு மாறாக தனது துருப்புக்களின் பாதுகாப்பு விவகாரமாக அரசு மாற்றப் பார்க்கின்றது.

உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய - மிகமோசமான - மனிதாபிமானப் பிரச்சினை இது என்பதையும், இதனைத் தீர்ப்பதற்கு திடமான முன் நடவடிக்கைகள் எடுக்கப் படாவிட்டால் சமாதானப் பேச்சுக்களிலும் உதவும் நாடுகளின் கூட்டத்திலும் பங்குபற்றுவது தொடர்பாக சாதகமான முடிவு எதனையும் எடுக்கும் நிலையில் நாம் இல்லை என்பதையும் அகாஷிக்கு நாம் விளக்கினோம்.

அகாஷி கொழும்புக்குத் திரும்பியதும் இரவே பிரதமரை பெரும்பாலும் சந்திப்பார் என எதிர்பார்க்கிறோம். எமது தலைவர் தெரிவித்த விடயங்களை அகாஷி பிரதமரிடம் தெரிவிப்பார். வரும் ஒருவார காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்பதையும் அவர் கவனிப்பார். எனவே, அடுத்த வாரம் மிக முக்கியமானதாகின்றது.

அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில், நாங்கள் சாதகமாக முடிவை எடுப்போம் இல்லாவிட்டால் பிரச்சினையாக இருக்கும்.

*கேள்வி:-* ஞானம்ஸ் ஹோட்டலில் இருந்து படையினரை விலக்கி வேறு இடத்தில் முகாம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அந்த முடிவை புலிகள் ஏன் நிராகரித்தார்கள்?

*பாலா:-* நகரின் மத்தியில் இரு ஹோட்டல்களில் இருந்து இராணுவத்தை யாழ். மாநகரப் பகுதிக்குள் உள்ள மற்றதோர் இடத்துக்து இடம் மாற்றவே அவர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

இது ஒரு வகையில் மீள் ஆக்கிரமிப்பே தவிர, இடம்மாற்றம் அல்ல.

துருப்புக்களை நகரின் ஒரு பகுதியில் இருந்து நகரின் மற்றொரு பகுதிக்கு இடம்மாற்றுவது பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை.

சன நெருக்கம் மிக்க நகரப் பகுதியில் இருந்து யாழ். மாநகர சபைப் பிரதேசத்துக்கு வெளியே இராணுவம் அகற்றப்படவேண்டும் என்பதையே எமது யாழ். மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

எமது தமிழ் எம்.பிக்கள் யாழ். மாநகரசபைப் பிரதேசத்துக்கு வெளியே - மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிக்கு அப்பால் - வேறு இடத்திற்கு இராணுவத்தை இடமாற்றுவதற்கு பிரேரித்துள்ளார்கள். ஆனால், யாழ். மாநகர சபைப் பிரதேசத்துக்குள் நிலைகொள்வதில் இராணுவம் விடாப்பிடியாக உள்ளது. அதுதான் பிரச்சினை.

*கேள்வி:-* அரசு உங்களின் எதிர்பார்ப்புத் தொடர்பாக சில தீர்மானங்களுடன் வந்தபின் நீங்கள் பேச்சுக்களிலும் உதவும் நாடுகளின் கூட்டத்திலும் பங்குபற்றும் சாத்தியம் ஏற்படுமா?

*பாலா:-* ஆம், ஆனால் பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து உள்ளனர். அவர்களில் சிறிய தொகையினரே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இரண்டு ஹோட்டல்களில் இருந்து ஆயுதப் படையினர் வெளியேறுவது மட்டும் பிரச்சினையைத் தீர்த்துவிடாது. அது ஒரு சிறிய நல்லெண்ண சமிக்ஞையாக மட்டுமே இருக்கமுடியும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

பல லட்சக் கணக்கான இடம்பெயர்ந்த எமது மக்களை இந்த இரண்டு ஹோட்டல்களில் மீளக் குடியமர்த்திவிட முடியாது.

வலிகாமம் வடக்கில் மட்டும் 42 கிராமசேவையாளர் பிரிவுகள் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

எனவே, இராணுவம் மிக முக்கியமான முடிவை - தீர்மானத்தை - எடுக்கவேண்டி இருக்கின்றது.

அதற்கு அவர்கள் நம்பியாரின் அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அதில் என்ன சிபாரிசு இருக்கின்றது என்பது எமக்குத் தெரியாது.

அவரின் சிபாரிசு எமது ஆயுதங்களைக் கீழே வைப்பதுடன், அல்லது பரங்கி நிலைகளை மாற்றி அமைப்பதுடன், தொடர்புபடுத்தப்படுமானால் அதை நாம் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். ஏனெனில், எமது ஆட்லறி நிலைகள் படையினரின் பாதுகாப்பு மையங்களில் இருந்து வெகுதொலைவில் காடுகளில்தான் உள்ளன. யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினருக்கு அவற்றால் அச்சுறுத்தல் இல்லை.

எனவே, மனிதாபிமானப் பிரச்சினையை படையினரின் பாதுகாப்புப் பிரச்சினைகளோடு தொடர்புபடுத்தக்கூடாது.

எனவே, இத்தகைய பிரச்சினைகள் தாம் தீர்க்கப்படவேண்டியுள்ளன.

நாங்கள் கடந்த 6 மாதமாக - 6 சுற்றுக்களில் - பேசியுள்ளோம். ஆனால், தீர்வு ஏதும் காணப்படவில்லை.

*கேள்வி:-* அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருப்பீர்களா?

*பாலா:-* நாங்கள் யாரைச் சந்திக்கவும் தயார். அமைச்சர்களுடனோ வேறு எவருடனோ பேச்சு நடத்துவது திறந்தே இருக்கின்றது. இப்போது நாங்கள் எமது செய்தியை நோர்வே மற்றும் ஜப்பான் தரப்பினர் ஊடாக அனுப்பிவைக்கின்றோம்.

அரசு உரிய தீர்வுகளைத் தயாரித்த பின்னர் எம்முடன் தொடர்புகொள்ளுமாயின் அது குறித்துப் பேச நாம் தயாராக இருக்கின்றோம். இதுதான் எமது நிலைப்பாடு. (ஐ-உ-3)

# புலிகள் டோக்கியோ செல்லாவிடின் சமாதான நகர்வுகள் பாதிக்கப்படலாம்

## வவுனியாவில் எரிக் சொல்ஹெய்ம் கருத்து

வவுனியா,மே8

இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகிய இரு தரப்பினரும் சமாதானம் ஏற்படுத்துவதில் ஆர்வமாக உள்ளனர். இதனையே சிவில் சமூகமும் எதிர்பார்க்கின்றது. டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றாவிடின் சமாதான நகர்வுகள் கூட பாதிக்கப்படலாம் என்று நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று வவுனியாவில் கூறினார்.

வவுனியா கள நிலைவரங்களை ஆராய்வதற்காக அவர் வவுனியா வந்திருந்தார். வவுனியா அரச செயலகத்தில் முற்பகல் 11.40 மணிமுதல் பிற்பகல் 12.45 மணிவரை அரச அதிப... கே.கணேஸ"டன் அவர் கலந்துரையாடினார்.

வவுனியா மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றும் பணி, எதிர்கால வேலைத் திட்டங்கள் ஆகியவை குறித்து வவுனியா அரச அதிபரிடம் அவர் கேட்டறிந்து கொண்டார்.

அவர் புள்ளிவிவரங்களையும் பெற்றுக்கொண்டார். அரச அதிபருடனான சந்திப்பு முடிந்தபின்னர் உள்ளூர் பத்திரிகையாளர்களை சொல்ஹெய்ம் சந்தித்தார். சமாதான நகர்வுகள் எவ்வாறு உள்ளன என்று கேட்டதற்கு சமாதானம் ஏற்படுவதையே அனைவரும் விரும்புகின்றோம் என்றார்.

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து இதுவரை புலிகள் அறிவிக்கவில்லையே என்று கூறியபோது டோக்கியோ மாநாடு இலங்கையின் வடக்குக்கோ தெற்குக்கோ நடைபெறும் மாநாடு அல்ல. ஒட்டுமொத்தமாக இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு அது. இந்த மாநாட்டில் புலிகள் தரப்பு பங்குபற்றாத பட்சத்தில் அதன் பலனை முழுமையாகப் பெறமுடியாது போய்விடும். இதனால் வழங்கும் உதவியின் தொகை குறைவதோடு, சமாதான நகர்வுகள் பாதிக்கப்படலாம் என்றார் சொல்ஹெய்ம். நேற்று யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள கள நிலைவரம் பற்றிப் பார்த்தோம். இன்று வவுனியாவில் நிலைமைகளை பார்வையிடுகின்றோம் பின்னர் மன்னார் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்வோம். நாளை கிளிநொச்சி சென்று அங்கு புலிகளின் தலைவர்களைச் சந்திக்கவிருக்கிறோம் எனவும் சொல்ஹெய்ம் சொன்னார். இந்தச் சந்திப்பில் நோர்வே வெளிநாட்டு அமைச்சின் அலுவலகத்தின் அதிகாரி லிஸா கோல்டன், போல் எரிக்சீஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று வவுனியாவில் அரச அதிபர் கே.கணேஸை சந்தித்து அவரோடு கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# களுத்துறையிலிருந்து விடுதலையான இரண்டு இளைஞர்கள் மீண்டும் கைது!

## இராணுவ உளவாளிகளின் கொலைச் சூத்திரதாரிகளாம்

களுத்துறை சிறையிலிருந்து விடுதலையான இரு தமிழ் இளைஞர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களில் கொழும்பில் நடந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவரின் கொலைகளின் சூத்திரதாரிகள் இவர்கள் என பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலும் கொழும்பிலும் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்ட இவர்கள் இரகசியப் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த மார்ச் 17ஆம் திகதி கதிர்காமநாதன் ரகுபதி என்பவர் கல்கிசைப் பகுதியிலும் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி லிங்கராசா தேவராசா என்பவர் பெப்பிலியானைப் பகுதியிலும் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஐ)

# பிரபா - அகாஷி சந்திப்புக் காட்சிகள்











நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அப்போது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு இது. *(படங்கள் : குகா)*





## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மே8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் நாளை 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஆச்சிரமத்தில் இடம்பெற்ற கந்தபுராணப்படன பூர்த்தி விழாவும், வள்ளியம்மன் திருமணப் படிப்பும் இடம்பெறும். (ம-173)

## குருநகர் பகுதி பொதுக் கிணறுகள் புனரமைக்கப்படும்

குருநகர்,மே8

குருநகர் பகுதியில் உள்ள பொதுக் கிணறுகள் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் மேற்பார்வையில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

குருநகர் ஜே/68, ஜே/69 கிராம சேவையாளர் பிரிவில் எட்டுப் பொதுக கிணறுகள் உள்ளன. இவைகளே புனரமைக்கப்படவுள்ளன.

இவைகளைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் - புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியும் யாழ்.பிரதேச செயலரால் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் - குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் நிர்வாகிகள் தெரிவித்தனர். (எ-51)

## கசிப்பு வழக்கில் 4பேருக்கு ரூ.61ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,மே8

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனையில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் நால்வருக்கு யாழ்.நீதிமன்றினால் 61 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானசீலன் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த அன்ரனி தேவதாஸ் என்பவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

கொக்குவில், அம்பாள் வீதியைச சேர்ந்த நாகராசா பத்மலோஜினி என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

குருநகர், ஜஸ்பிளான்ற் வீதியைச் சேர்ந்த சின்னப்பு இராஜேஸ்வரன் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.(எ-10)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி!

வடமராட்சி, மே8

துன்னாலை, பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை வரை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை காலை 9மணிமுதல் 11மணி வரை அல்லையம்பதி சனசமூக நிலையத்திலும், 11மணி முதல் ஒருமணிவரை வல்லிபுரக்குறிச்சி பொதுமண்டபத்திலும் ஒரு மணிமுதல் 3மணிவரை கோவிற்கடவை சனசமூக நிலையத்திலும் -

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30மணிமுதல் 10.30மணி வரை துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் 11மணி முதல் 12.30 மணிவரை கலிகை சனசமூக நிலையத்திலும் -

10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிமுதல்10.30மணிவரை குடவத்தை சனசமூக நிலையத்திலும், 11மணிமுதல் 12.30மணிவரை வல்லியானந்தம் சனசமூக நிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும். (ம-173)

## ஊழியர் தேவை

ஊழிய வாஞ்சையும், பாரமுமுள்ள கிறிஸ்தவ விசுவாசிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுந்த வேதனம் வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

போதகர்
**தமிழ் மிஷன் சபை**
418, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(17634)

---

இராஜகோபுரம் நிர்மாணிப்பதற்கான
## கேள்விப்பத்திரம் கோரல்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி ஆலயத்திற்கு இராஜகோபுரம் நிர்மாணிப்பதற்கு எம்பெருமான் அருள் பாலித்துள்ளார்.

இச்சேவைக்குரிய கேள்விப் பத்திரம் அனுப்புபவர்கள் பின்வரும் விவரங்களுடன் எதிர்வரும் 2003-05-14ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு திருப்பணிச் சபை செயலாளருக்கு எழுத்துமூலம் அனுப்புதல் வேண்டும்.

01) ஐந்து (05) தள இராஜகோபுரத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருள்களின் விவரமும் அவற்றின் விலைகளும்.
02) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தக் கூலி.
03) தாங்கள் ஏற்கனவே இராஜகோபுரம் நிர்மாணித்த ஆலயங்களின் பெயர் விவரம்.

மேலதிக விவரங்களை நேரில் ஆலயத்தில்
தினசரி மாலை 5.00மணி முதல் 6.00மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நீ.மயில்வாகனம் (செயலாளர்), திருப்பணிச்சபை
நடராஜ இராமலிங்க சுவாமி கோவில் (சிவன் கோவில்), ஆவரங்கால்.

(17633)

---

## ஆறாத் துயரில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவபுண்ணியம் வள்ளியம்மா

(பவளம்)

மலர்வு 18-05-1948 — உதிர்வு 28-04-1997

திதி: 08-05-2003 - ஸப்தமி

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அம்மாவே!
இருவிழி சிந்திய நீர்த்துளி இன்னும் காயவில்லை
அம்மாவே அதற்குள்ளே ஆறாண்டுகள்
ஆனதம்மா எங்கள் விழி எல்லாம்
நீர் தேங்கி நிற்கின்றதம்மா!

'பவளபவனம்',
நவிண்டில்.

(17572)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 - 06 - 1920



மறைவு 08 - 04 - 2003

### திருமதி சரஸ்வதி இளையகுட்டி

(தோப்பு - அச்சுவேலி)

அன்பிற்கு இலக்கணமாம் எங்கள் அம்மா!
ஆறுதலின் சிகரமாம் எங்கள் அம்மா!
பண்பின் இருப்பிடமாம் எங்கள் அம்மா!
பாரினில் எமையீன்ற எங்கள் அம்மா!
இனி எங்கே காண்போம் உங்களை நாம்?
இங்கே ஏங்கித் தவிக்கின்றோம் நீங்களின்றி!
"அம்மா" என்றழைக்க இனி யாருமில்லை எங்களுக்கு!
எங்கும் நிறைந்திருக்கும் இறைவனடி குளிர்ந்திருக்க
இங்கு நாம் இறைஞ்சுகின்றோம் இறைவனையே!

\- பிள்ளைகள்.

ஸ்ரீராம் நெசவுசாலை ஒழுங்கை,
கோப்பாய், தெற்கு, கோப்பாய்
(இருபாலைச்சந்தி)

(17564)

---

## கூறுவிலை கோரல்

**தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

பதிவு. இல J/1591 - 06. 03. 1972

எமது சங்கத்தில் கீழ்க்காணும் கட்டடவேலைக்கு கூலிகளுக்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகின்றது

01. மதில் - 7' உயரம் மொத்த நீளம் - 253'
02. உற்பத்தி நிலையத்தின் தெற்குப் பக்கத்தில் கொட்டகை ஒன்று அமைத்தல்.

மேலதிக விவரங்கள் யாவும் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 13.05.2003**

*சித்தியம்புளியடி,*
*தெல்லிப்பழை.*
*06.05.2003.*

தலைவர்,
பனை தென்னை வள அ.கூ.சங்கம்,
தெல்லிப்பழை.

(17627)

---

ஈரவிழிகளுடன்
## ஈழ மண்ணின் மைந்தனுக்கு அஞ்சலி
## 3ஆம் ஆண்டு வீரவணக்கம்

அரும்பாய் 5 - 11 - 1978



விதையாய் 10 - 5 - 2000

### கப்டன் வீரமணி/கேசவன்

(இம்ரான் பாண்டியன் படையணி)

### சோதிலிங்கம் யாதவன்

திதி:-ஸப்தமி (8-5-03)

*குடும்பத்தில் பூத்த முதல் மலரே!*
*வாடாமலரென உன் சிரித்த முகம்*
*பார்க்கக் காத்திருந்தோம் - வீர மகனாக*
*அரியாலை மண்ணில் வீரமணியாக - வித்தாகினாயே!*
*கலங்காதேயம்மா என்று இறுதி மடல் எழுதினாயே!*
*கலங்கியே கண்ணிருடன் பதில் மடல் எழுத*
*போனவிடம் தெரியாது தவிக்கின்றோம்.*
*மூன்றாண்டுகளாக...*

உன் பிரிவால் துயருறும்:
அ.சோதிலிங்கம்(அப்பா)
சோ.பவானி (அம்மா)
உடன் பிறப்புக்கள்:-
சாரங்கி (போராளி-வீரமகள்)
ஆதவன், மாதங்கி.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

(17629)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 - 10 - 1921



மறைவு 08 - 04 - 2003

### அமரர் சிற்றம்பலம் கனகசபை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யாழ். கச்சேரி)

புகழ் தந்தாய்! வளம் தந்தாய்!!
கல்வியுடன் கலைகளும் தந்தாய்!
கௌரவம் சேர் கட்டுப்பாடு தந்தாய்!
கருவிழி அகலா நின் நிழலையும் தந்தாய்!
அன்பின் உருவாகவும் பாசத்தின் பிறப்பிடமாகவும் திகழ்ந்தாய்!
மண்ணிலே உன் உருவை ஏன் மறைத்தாய்?
உன் ஆத்மா சாந்தி பெறுக!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது அன்புத் தந்தையார் இறைபதமெய்திய செய்தி அறிந்து நேரில் வந்தோருக்கும் நீண்ட காலமாக வைத்திய உதவிகள் புரிந்த வைத்திய கலாநிதி திருமதி நாகேந்திரா அவர்களுக்கும் மற்றும் வைத்திய நிபுணர்களுக்கும் திருநெல்வேலி தென்றல் நர்ஸிங் ஹோம் பொறுப்பதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் மற்றும் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை டாக்டர், தாதியர், ஊழியர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (08-05-2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
**மனைவி, மக்கள்.**

*நிரந்தர முகவரி:* மாவிட்டபுரம்
*தற்காலிக முகவரி:* வடலித்தோட்டம்
*தற்போதைய வதிவிடம்:* மானிப்பாய்.

(17620)

# உதயன்

## சமாதான முயற்சிகளை காவுகொள்ளும் அறிவிப்பு

வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - போரினால் பேரழிவுகளைச் சந்தித்த தமிழ் மக்களின் அவசர - அன்றாட - பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் போது 'உடனடி மனிதாபிமானத் தேவைகள் மற்றும் புனரமைப்புக்கான உப குழு' (சிரான்) ஸ்தாபிக்கப்பட்டது.

அரசும் புலிகளும் இந்த உபகுழுவில் சமமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த உபகுழு ஏதோ தமிழ் மக்களின் அன்றாட - அத்தியாவசிய - பிரச்சினைகளைத் தீர்க்க விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும், அதனால் களத்தில் பல மாற்றங்கள், அபிவிருத்தி தென்படும் என்றெல்லாம் தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. காலம் கடந்ததுதான் மிச்சம்.

அரசும், புலிகளும் கூடிக்கூடிக் கதைத்தது தவிர, களத்தில் கண்டது ஒன்றுமில்லை என்ற போது புலிகள் அதனால், விசனமுற்றதில் தப்பில்லையே!

ஒப்பந்த ஏற்பாடுகளிலும் பேச்சு மேசையிலும் காணப்பட்ட இணக்கங்கள் செயற்படுத்தப்படாமல் அரசுத் தரப்பு இழுத்தடித்து வருகின்றது என்பது புலிகளின் - தமிழ் மக்களின் - குற்றச்சாட்டு.

சமாதானப் பேச்சுக்களைத் தற்காலிகமாக புலிகள் இடைநிறுத்தியதற்கான முக்கிய காரணங்களுள் இதுவும் ஒன்று.

என்றாலும், 'சிரான்' உபகுழு காலம் இழுத்தடிப்பட்டாவது ஓரளவுக்கு செயற்படும் என்று மக்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதறடிக்கும் விதத்தில் புதிய தகவல் வெளியாகியிருக்கின்றது.

'சிரானின்' செயற்பாட்டுக்கு அச்சாணியாக விளங்க வேண்டிய நிதிப் பிரிவை இயங்க வைப்பதில் சட்டச் சிக்கல் இருக்கின்றது என்ற புதிய 'குண்டை' தூக்கிப் போட்டிருக்கின்றது அரசுத்தரப்பு.

'சிரான்' உபகுழுவின் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 'வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியம்' என்ற நிதிக் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு - புலிகள் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டது.

வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்குத் தேவையான நிதியை சர்வதேச சமூகத்திடம் அரசும் புலிகளும் சேர்ந்து கூட்டாகக் கோரிக்கை முன்வைத்துப் பெற்றுக்கொள்வது என்றும், அவ்வாறு கிடைக்கும் நிதியை இந்த நிதியத்தில் வைப்பிலிட்டு - உலக வங்கியின் கண்காணிப்பின் கீழ் - 'சிரான்' ஊடாக உரிய புனரமைப்புத் திட்டங்களுக்கு அதைச் செலவிடுவது என்றும் ஏற்கனவே அரசு - புலிகள் பேச்சில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதைச் செயற்படுத்துவதில் அரசுத் தரப்பில் பல இழுத்தடிப்புகள் செய்யப்பட்டாலும் அந்த நடைமுறை விரைவில் செயலுருப் பெறும் என்ற எதிர்பார்ப்பு - நம்பிக்கை - பல தரப்பிலும் இருந்து வந்தது உண்மை.

ஆனால், புலிகளும், அரசும் சரிசமனான பிரதிநிதித்துவம் வகிக்கும் சிரான் அமைப்பு, இந்த நிதியைக் கையாள்வதில் சட்டச்சிக்கல் இருப்பதாக சட்டமா அதிபர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் என்ற புதிய குண்டை அரசுத் தரப்பு இப்போது போட்டிருக்கின்றது.

இந்தக் குண்டு 'சிரான்' உபகுழுவின் உயிரையே ஒரே போக்கில் காவு கொண்டு விடக் கூடியது என்பதுதான் அச்சத்துக்குரிய விவகாரமாகும்.

இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் - அமைதி வழியில் - தீர்வு காண்பதில் அரசுக்கு உண்மையில் உறுதிப்பாடும் துணிவும் திடமும் இருக்குமாயின், இத்தகைய சட்டச்சிக்கல் போன்ற சிறிய விடயங்களைத் தூசாக மதித்து, சட்டரீதியாகவே அவற்றை விரைந்து தாண்டி, வேகமாகச் செயற்படும் போக்கை அது நடைமுறையில் காட்டத்தக்கதாக இருக்க வேண்டும்.

அதுதான் இப்போது தேவைப்படுகின்றது. அதைச் செய்து 'சிரான்' உபகுழுவின் உயிரை அரசு பிழைக்க வைக்குமா? பின்னடைவு கண்டிருக்கும் சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு முண்டு கொடுக்குமா?

அடுத்து வரும் நாள்களில் - வாரங்களில் - இதற்கு விடை கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

## ஆனையிறவு உப்பள ஊழியருக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,மே8

ஆனையிறவு வடபிராந்திய உப்பளத்தில் பணிபுரிந்து வேலையிழந்தவர்களுக்கு தொழில் இழப்புத் திட்டத்தின்கீழ் நஷ்டஈடு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை முதலீட்டு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திருமதி யோ. மகேசனுக்கு இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த அறிக்கையின்படி ஆனையிறவு வடபிராந்திய உப்பளத்தில் கடைசி 5வருடங்கள் பணிபுரிந்தவர்களுக்கு 10 மாதத திரட்டிய சம்பளமும், 5தொடக்கம் 10வருடங்கள் சேவையாற்றியோருக்கு 25மாதத் திரட்டிய சம்பளமும், 10முதல் 15வருடங்கள் பணிபுரிந்தவர்களுக்கு 35மாத சம்பளமும் 15முதல் 20வருடங்கள் பணிபுரிந்தவர்களுக்கு45மாதச் சம்பளமும், 20வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு 50மாதச் சம்பளம் நஷ்ட ஈடாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை -

நிறைவேற்றுத் தரத்தை உடைய அதிகாரிகளுக்கு 3லட்சத்து 50ஆயிரம் ரூபா வீதமும் நிறைவேற்று தரமற்ற அதிகாரிகளுக்கு 3 லட்சம் வீதமும் நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## நாட்டு நடப்பு

### பாணுண்ட கணவன் பாவம்



காலையில் எழுந்து ஓடி
கடையிலே பாணை வாங்கி
நாலைந்து துண்டாய் வெட்டி
நண்பகலுக்கு பாதி வைத்து
சேலையை கட்டிக் கொண்டு
செப்பமாய் 'ரீவி' முன்னிருப்பாள்
நாலைந்து நாடகங்களோடு
நல்லதோர் படமும் ஓடும்
வேலையால் கணவன் வந்து
விறுவிறுத்து பசியால் வாட
காலைப்பாண் மிகுதி உண்டு
கடையில் பழம் வாங்குமென்ன
நிலைகுலைந்த கணவன் மெல்ல
நிம்மதிப் பெருமூச்சு விட்டு
குலமகள் கொடுத்த பாணை
குழம்பின்றி பழத்தோடு உண்டான்.

- விகடகவி.

# குடாநாட்டில் மின் சேமிப்புக்கு புதிய மின்குமிழ்கள் அறிமுகம்

## அடுத்த மாதம்முதல் மின்சாரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே8

அடுத்தமாதம் முதலாம் திகதிமுதல் யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு புதிய வகை மின்சேமிப்பு மின்குமிழ்கள் மின்சார சபையால் கடனடிப்படையில் வழங்கப்பட உள்ளன.

மின்சாரத்தை சேமிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மின்சாரசபை இந்த புதிய முறையை நடைமுறைப்படுத்த உள்ளது.

இத்தகவலை இலங்கை மின்சாரசபையின் வடக்கு உதவிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

தற்போது யாழ்.மாவட்டத்தின் பலபகுதிகளுக்கும் மின் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. அதில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் அதிகளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இது மின்சார சபைக்கு சிரமங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதனைத் தவிர்ப்பதற்காகவும் யாழ்.மாவட்டம் முழுவதும் விரைவில் மின் விநியோகத்தினை மேற்கொள்வதற்கு வசதியாகவும் மின்சாரத்தை சேமிக்க வேண்டியுள்ளது. இதற்காகவே மின்சாரத்தை சேமிக்க உதவும் மின் குமிழ்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் தமது தேவையைப் பொறுத்து இரண்டிற்கு மேற்பட்ட மின்சேமிப்பு மின் குமிழ்களைப் பெறுதல் வேண்டும். இந்த மின் குமிழ்கள் கடனடிப்படையில் வழங்கப்படும்.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இந்த மின்குமிழ்ப் பாவனை முதலில் அறிமுகப்படுத்தப்படும். அடுத்த மாத இறுதிக்குள் மாவட்டம் முழுவதும் இதன் பாவனை நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த மின்குமிழ் பாவனை மூலம் மின்சாரசபைக்கு மட்டுமன்றி பாவனையாளர்களுக்கும் மின்சாரத்தை சேமிக்க வழி ஏற்படும் என்றும் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ம-12)

## யாழ்.கஸ்தூரியார் வீதியில் விபத்தில் யுவதி பலியான சம்பவம்; சகோதரனுக்கு ரூ.1லட்சம் நஷ்டஈடு!

யாழ்ப்பாணம்,மே8

கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ். கஸ்தூரியார் வீதிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கொல்லப்பட்ட யுவதியின் சகோதரனுக்கு நஷ்டஈடாக ஒரு லட்சம் ரூபா பணத்தை வழங்குவதற்கு விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் உள்ள புடைவைக் கடையொன்றில் பணியாற்றிவந்த கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த யோகராணி சற்குருநாதபிள்ளை என்ற யுவதி தனது பணியை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி லொறியினால் மோதுண்டு உயிரிழந்தார்.

இதுதொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நடைபெற்று வந்தது. கடந்த 30ஆம் திகதி வழக்கு விசாரணை நடைபெற்ற போது லொறியின் சாரதியான கதிரவேலு இராசதுரை (அராலி வடக்கு) குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், யுவதியின் சகோதரனுக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கவும் சம்மதித்துள்ளார்.

இதனை அடுத்து, மேற்படி பணத்தை யுவதியின் சகோதரனுக்கு வழங்குமாறு பணித்த நீதிவான் இ.த.விக்னராஜா, கட்டுப்பாடின்றி வேகமாக லொறியைச் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரம் இல்லாமை, வாகனத்தால் யுவதியை மோதிக் கொன்றமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 500 ரூபாப்படி ஆயிரத்து 500ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறும் தீர்ப்பளித்தார். (எ-10)

## மிதிவெடி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,மே8

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுரணையுடன் சர்வோதய அமைப்பினால் கிராம மட்டத்திலான மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மிதிவெடிகள் உட்பட வெடிபொருள்கள் பற்றிய அபாயத்தினை கலந்துரையாடல்கள் மூலம் கிராம மக்களுக்குத் தாம் எடுத்துக் கூறி வருவதாக சர்வோதய அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வாரத்தில் இவ்வாறான 15 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்ற போதும் பொதுமக்கள் இது விடயத்தில் அதிகம் கவனம் எடுப்பதில்லை எனவும் இதனால் அவர்கள் அபாயத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட மிதிவெடி அகற்றப்பட்டு வருகின்ற பகுதிகளின் அருகே உள்ள மக்களுக்கும் விசேட கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-10)

### நாளை

சித்திரை 26
வெள்ளிக்கிழமை
09.05.2003
திதி : அட்டமி
நள்ளிரவு 12.04 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
முன்னிரவு 10.36 வரை
சுபநேரம் : 5.54-7.24
ராகுகாலம் : 10.24-11.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு கணப் பொறுமை ஒரு பத்தாண்டின் இன்பமாகும்.

## புதுக்குடியிருப்பில் இயங்கும் தபாலகம் முல்லைத்தீவில்!

பேருவளை,மே8

புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத்தீவு தபால் நிலையமும் பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகமும் மீண்டும் முல்லைத்தீவில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்காக 50 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 20 லட்சம் ரூபாவை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடபிரதேசத்தின் தபால் சேவைகளை சீரமைப்பதற்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சு பல உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தபால் திணைக்களத்துக்கு விடுத்த பணிப்புரையை அடுத்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள தபால் நிலையங்களை துரிதமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 7கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படும் யாழ். பிரதம தபாலகத்தின் புனரமைப்பு வேலைகள் அரைவாசியளவு பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 5கோடி ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி தபாலகத்தின் புனரமைப்புக்கு முதற்கட்டமாக 40இலட்சம் ரூபாவும், காரைநகர் தபால் நிலையத்தைப் புனரமைப்பதற்கு மூன்றரை லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

## எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் பருத்தித்துறையில்; இதனால் மக்கள் சிரமம்

தென்மராட்சி,மே8

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் பருத்தித்துறையில் இயங்குவதால் தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உப அஞ்சல் அலுவலகப் பிரிவுக்கு உட்பட்ட பெருமளவு குடும்பங்கள தென்மராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த ஒரு வருடமாகத் தங்கியுள்ளனர். இவர்கள் தமது கடிதங்களையும் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தினையும் தற்போது பருத்தித்துறைக்குச் சென்றே பெறவேண்டியுள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, கரம்பகம், முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தங்கியுள்ளதால் எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தை கொடிகாமத்தில் இயங்க வைக்குமாறு வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தை கோரியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-117)

துயர் தீரா எம் நெஞ்சினால் நாம் தரும்

## 34ஆம் ஆண்டு நிறைவு அஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே... என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



| இருவருக்கு மகனாக | இறைவனுக்கு மகனாக |
|---|---|
| 18 - 03 - 1909 | 08 - 05 - 1969 |

### அமரர் அந்தோனி சிறில் (ஓய்வுபெற்ற அதிபர்)

திங்கள் தன் ஒளியை இந்த மண்ணுக்குத் தந்துதன்னை
உருக்கியே மறைதல் போல
ஒளிதரும் மெழுகுவர்த்தி தன்கடன் திறம்படச் செய்து
தான் அற்றுப்போதல் போல
எங்களின் சுகத்திற்காக எங்களின் வளர்ச்சிக்காக
எண்ணற்ற கடமை செய்த தெய்வமே!
உங்களை நாம் மறவா வரமொன்று ஈந்திடுங்கள்
எங்களின் விழிநீர் சிந்தும் அஞ்சலி ஏற்றிடுங்கள்.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

அரசடி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்: அ.சி.மத்தியூஸ் (மகன்),
சுன்னாகம்.

(27765)

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 03 - 1958 | 01 - 05 - 2003 |

### அமரர் தர்மலிங்கம் ஸ்ரீவரதலிங்கம்

(வருமான மேற்பார்வையாளர்)

எமது அலுவலகத்தில் கடமையாற்றிய இவரின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

பொறுப்பதிகாரியும், உத்தியோகத்தர்களும்,
வலி.கிழக்குப் பிரதேசசபை,
உரும்பிராய் உப அலுவலகம்.

(17631)

## தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சிநெறி

பாடசாலையை விட்டு விலகியோரின் நன்மை கருதி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சிகளை தமிழ், ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கவுள்ளது. 7மாத காலம் வகுப்பறைப் பயிற்சியும் 5 மாத காலம் பொது அலுவலக செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படும். ஆர்வமுடையோர் வேலை நாள்களில் கழகத்தில் எதிர்வரும் 19ஆம திகதிக்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (ம)

## வீதிகளை திருத்தக்கோரிக்கை

பண்டத்தரிப்பு அம்மன் வீதி, சென் ஜேம்ஸ் வீதி என்பன நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருந்து வருகின்றன.

இது குறித்து சென்ஜேம்ஸ் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கி.ஏ.பங்கிறாஸ் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ்வரும் மேற்படி இரு வீதிகளும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது குண்டும் குழியுமாகவுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு உடன நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதி மானிப்பாய் பிரதேச சபைக்கும் அனுப்பிவைக்கப்படும்.(ம)

## திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ஞாயிறு தோறும் தொடராக இடம்பெற்று வரும் திரைப்படக் காட்சித் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நிக்கலஸ் குளோட்ஸ் இயக்கிய "பெங்கோலி நைற்" (The Bengoli Night) என்னும் ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் திரு.அ.யேசுராசா தலைமையில் படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் இந்து மயான அபிவிருத்தி சபை.

## விண்ணப்பம்

கொக்குவில் இந்து மயானத்தில் பணியாற்ற சிற்றூழியர் தர விண்ணப்பம் கோரப்படுகின்றது. விரும்புவோர் 19-05-2003 திங்கள் காலை 10.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலகத்திற்கு தமது விண்ணப்பத்துடன் சமுகமளிக்கவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

பொ.யோகலிங்கம்
தலைவர்

(சி-27766)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

லிவ்கோ கல்வி நிலையம், உடுப்பிட்டி

*எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று க.பொ.த. (சா/த) பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற*

செல்வன் பி.பியோமதுசூதனன் - 10A

செல்வன் த.ஜெயராம் - 8A,C,S

ஆகியோரையும்

சித்திபெற்ற எமது ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(17624)

நிர்வாகி, ஆசிரியர்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 06 - 1975 | 08 - 05 - 2000 |

### செல்வன் நடேசலிங்கம் மதியழகன்

மூன்றாண்டு சென்றதையா - மதி
அன்பின் உருவாய், அறிவின் சுடராய், பண்பின் நிறைவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எமக்கெல்லாம் நல்வழி காட்டி
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட
எங்கள் மகனே! எம்மை விட்டுப்பிரிந்து மூன்றாண்டு சென்றாலும்
உன்நினைவு எம்மை விட்டு நீங்காது

*உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மண்கும்பான்,
4ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

*5ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.*

(17614)

உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா,
தங்கை, தம்பிமார்,
மச்சான், மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்



*மறக்க முடியுமா? மறக்கத்தான் முடியுமா!*
*இறந்தபின் னுமுலகோர் 'இதயங்குடி' கொண்டோரை*
*அந்த வரிசையிலே முதன்மையருள் ஒருவராய் 'மணியம்' உள்ளார்*
*எந்தப் பொழுதும் அவர் இனியபுன் சிரிப்பு எளிமை*
*எங்கள் மன்றத்து நீண்டநாள் 'பொருளாளர்'*
*'அங்கத்தவர்' ஆரம்ப நாள் முதலாய் தொண்டு செய்தீர்*
*எங்கட்கு உயர்'ஈகை' அர்ப்பணிப்பு செய்தியாகம்*
*தந்தவரே! தாங்குமா எம்'இதயம்'? திடீரும்பிரிவை*
*வையம் மறக்குமா? மாண்புடனே 'போற்றிநின்று'*
*ஐயா! உன் 'ஆத்மா' அருஞ்'சாந்தி' பெறவேண்டும்.*

*கவிதை வடிவமைப்பு:*
*'சுகசீவன்'*

(சி-27768)

வணிகர் மன்றம்,
கொடிகாமம்.

தாயின் மடி வந்தது 18-01-1942

தாயக மண் விட்டது 08-04-2003

## யாழ். நகரின் மத்திய பகுதியில்

# படைமுகம் அகற்றுதலும் அமைத்தலும்: சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த நிலை!

### பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே8

யாழ். நகரின் மத்தியிலுள்ள படைமுகாம் அகற்றப்பட்டு நகரின் மற்றொரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைக்கப்படுவதானது, நகர மக்களைப் பொறுத்தவரை 'சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த' நிலையாகவே உள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.

யாழ். கோட்டைப் பகுதியில் புதிதாக படைமுகாம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து அச்சங்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிநாதம் மக்களை இயல்பு வாழ்க்கைக்குத் திருப்புவதாகும். ஆனால், படை முகாம்கள் நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைக்கப்படுவது, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இப்பகுதியில் பாடசாலைகள், நூலகங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்கள், பொதுமண்டபங்கள், விளையாட்டரங்குகள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றன அமைந்திருக்கின்றன.

மக்களின் நாளாந்த தேவைகளுக்கு மிக அவசியமான இப்பிரதேசத்தில் படைமுகாம் அமைக்கப்படுவது உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# வன்னி தபால் சேவைகள் சீரமைப்புக்கு ஜூன் 3 கூட்டத்தில் உரிய நடவடிக்கை!

### வவுனியாவில் அமைச்சர் இம்தியாஸ்

வவுனியா,மே7

போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புச் சேவையை சீர்செய்வதற்கு எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத்தில் முக்கிய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

16 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அஞ்சல் கடையையும், கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சேதமுற்றிருந்து 30 லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அஞ்சல் அலுவலகத்தையும் அமைச்சர் வவுனியாவில் கடந்த ஞாயிறன்று திறந்துவைத்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வரும் கலந்துகொண்டிருந்தார்.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அஞ்சல் துறையில் நிலவுகின்ற குறைபாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், இம்மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஆகியோர் அமைச்சர் இம்தியாஸிடம் எடுத்துக் கூறினர்.

இவற்றைக் கேட்டறிந்த பின்னரே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வவுனியாவில் இருந்து வன்னிப் பிரதேசத்துக்கும் யாழ்ப்பாணத்துக்குமான அஞ்சல் போக்குவரத்துச் சேவையைத் தினசரி நடத்துவதற்காக இரண்டு வாகனங்களையும் அமைச்சர் அதிகாரிகளிடம் கையளித்தார்.

இந்த வாகனங்களின் உதவியுடன் திங்கள் தொடக்கம் வடபகுதிக்கான அஞ்சல் போக்குவரத்து சேவை தினசரி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏ-9 வீதியினூடாக தரை வழியால் யாழ்ப்பாணத்திற்கான அஞ்சல் சேவை ஒருநாள் விட்டு ஒருநாள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வவுனியா, நேரியகுளம், கிளிநொச்சி,பளை ஆகிய அஞ்சல் அலுவலகங்களுக்கான தொலைநகல் இயந்திரங்களையும் அமைச்சர் இம்தியாஸ் வழங்கினார். (எ)

# மகரகமவில் பூரண சிகிச்சை கிடைக்காமல் மரணமடையும் வடபகுதி புற்றுநோயாளர்கள்

வடபகுதியில் இருந்து சிகிச்சைக்காக கொழும்பு மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், அங்கு பூரண சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் படுகின்ற அவஸ்தையினையும் எதிர் நோக்கும் இன்னல்களையும் அங்கு பணியாற்றும் வைத்தியர் ந.ஜெயக்குமார் தனது அனுபவத்தின் வாயிலாக வெளிப்படுத்துவதே இந்த ஆக்கம்.

வடபகுதியில் புற்று நோயாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இலங்கையில் பெரும்பாலான ஆண்கள் வாய் மற்றும் தொண்டை சம்பந்தமான புற்று



நோயினாலும் பெண்கள் மார்பகப் புற்று நோயினாலும், குழந்தைகள் இரத்தப் புற்றுநோயினாலும் பாதிக்கப்படுகின்றனர்.

வடபகுதியில் யாழ்போதனா வைத்தியசாலையில் ஓரளவிற்கு இவர்களின் நோய் அறியப்பட்டு மகரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்கள் முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் கப்பல மூலமாகவும் பின்பு தரை வழியாகவும் மகரகம சென்றடைந்தனர். இப்போது அவர்கள் தாமாகவே அங்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய சூழல் ஏற்பட்டுள்ளது. நோயாளர்கள் தமக்குத் துணையாக ஒருவரை ஏற்பாடு செய்தே பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அங்கு சிகிச்சை முடியும் வரை அவர் நோயாளியுடன் தங்கியிருக்கவும் வேண்டும்.

இதனால், நோயாளரும் அவரது துணைக்கு வருபவரும் தமது தொழிலை இழக்கவேண்டியும் அதற்கு மேலாக பல ஆயிரம் ரூபாய் பணம் செலவு செய்ய வேண்டியும் ஏற்படுகிறது.

அவர்களுடன் தமிழில்பேச எம்மைப் போன்ற ஒரு சிலரே அங்கு உள்ளனர். எமக்கோ பூரணமாக உதவி செய்யக்கூடிய அளவிற்கு நேரமும் கிடைப்பதில்லை. அதற்கு மேலாக அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள், மனக்கிலேசத்துடன் வடபகுதியில் இருந்து சிகிச்சை பெற வந்திருக்கும் நோயாளர்களையும் பராமரிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது.

இவ்வாறான பல கஷ்டங்களினால் அவர்கள் கிரமமாக மகரகம சென்று வைத்தியம் செய்ய முடியாது உள்ளதால் அவர்களின் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத அளவுக்கு முதிர்வடைந்த நிலையில் விரைவில் இறப்பை அணமிக்கும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது.

இத்தகைய துயரமான நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு நோக்கினால் வடபகுதிக்கென புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு ஒன்றை சகல நோயாளர்களும் ஓரளவுக்கு இலகுவாக அடையக் கூடிய இடத்தில் அமைத்தலே சாலச் சிறந்தது.

இவ்வாறான ஒரு வைத்தியசாலையை காரைநகரிலோ, காங்கேசன்துறையிலோ, வல்வெட்டித்துறையிலோ அன்றி ஓமந்தையிலோ அமைத்தால் இப்போது இந்த நோயாளிகள் அனுபவிக்கும் துயர் மீண்டும் ஒரு தொடர் கதையாகவே அமைந்துவிடும்.

புதிதாக அமைக்கப்படவேண்டிய புற்றுநோய் சிகிச்சைநிலையம், யாழ். போதனா வைத்தியசாலையின் ஓர் அலகாகவோ அன்றி அதனை மிகவும் அண்மித்த ஓர் இடத்திலேயோ அமைப்பதே சாலச்சிறந்ததாகும்.

இதன்மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் பல்துறை வைத்திய நிபுணத்துவரின் ஆலோசனை மற்றும் சிகிச்சைகளை இவர்கள் இலகுவில் பெறக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். அத்துடன் ஆய்வுகூட வசதி, கதிர்ப்பட மற்றும் நோய்க்காற்றியல் வசதிகள் இலகுவாக பெறக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

மருத்துவபீட உதவியுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி பூரண சிகிச்சையை நோயாளருக்கு வழங்குவதற்கும் வாய்ப்பு உள்ளது. மற்றும புற்றுநோயாளர்கள் தனிமைப்படுத்தப்படுதல் போன்ற சமூகப்பிரச்சினைகளை வெகுவாகக் குறைக்கவும் சந்தர்ப்பம் உள்ளது.

நான் மகரகம தேசிய புற்றுநோய்ப் பிரிவில் வேலை செய்வதால் அங்குள்ள குறைபாடுகள் மற்றும் நோயாளர்களை அடிக்கடி மற்றையதுறை நிபுணத்துவ ஆலோசனைக்காக அன்றிச்சிகிச்சைகாக மாற்றுதல்மூலம் சிகிச்சை தாமதம் அடைவதை கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் உருவாக்கப்பட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் கண்டி, காலி, அநுராதபுரம், பதுளை ஆகிய இடங்களிலுள்ள பொது போதனா வைத்தியசாலையின் ஓர் அலகாகவே அமைக்கப்பட்டு நோயாளர்களுக்கு பலதுறை நிபுணத்துவம் அடங்கலான நவீன முறைப்படி சிகிச்சை வழங்கி வருகின்றது.

இன்று புற்றுநோயியல் சிகிச்சையானது புதிய கண்டுபிடிப்புகளின் நிமித்தமாக வெளிநோயாளர் சிகிச்சையாக மேற்கொள்ளப்படுவதால் தொழில்புரிவோர் தொழிலுக்கு செல்ல வாய்ப்பும் உள்ளது.


இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு, இவ்வாறான புதிய சிகிச்சை நிலையத்தை புற்றுநோயியலில் பட்டம் பெற்ற அல்லது நிபுணர்களாக உள்ளவர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுதல் வேண்டும். நோயாளர் நலன் கருதி தம் அறிவுரைகளைப் பயனுள்ளதாக வழங்குவதால் நல்ல ஒரு நிலையத்தை அமைக்கலாம்.

இவ்வாறான ஒரு நிலையம் அமையும் வரை வைத்தியர் செல்வி நகனரட்ணம் அவர்களின் அயரா முயற்சியால் மீளப் புத்துயிர் பெற்ற அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மேலதிக வசதிகள் சில செய்து அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களைக் கவனிக்க ஆவன செய்யவேண்டும். பின்பு இதனை புற்றுநோய் சம்பந்தமான ஒரு நிலையமாக மாற்றி புற்றுநோயாளர்களுக்கு உதவி செய்யலாம்.

## கல்விச்சாலைக்காட்சிகள்



சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய மெய்வன்மைப்போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் திருமதி ச.சிவகுமார் காணப்படுகின்றார். (எ-29)



கைதடி குருசாமி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது நடைபெற்ற மாணவர்களின் உடற்பயிற்சியினைப் படத்தில் காணலாம். (எ-117)



யாழ்.சென்.ஜோன்ஸ் முன்பள்ளி நிலையத்தின் சிறுவர் விளையாட்டு விழா அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி ஆசிரியர் எஸ்.அல்போன்ஸிடமிருந்து மாணவன் ஜே.கூபிட்சன் பரிசினைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். முன்பள்ளி ஆசிரியைகளில் ஒருவரான டொறிஸ் அருகில் காணப்படுகின்றார். (எ-30)



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.நஷிராஜ் மைதானத்திற்கு அழைத்துச செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் காணப்படுகின்றார். (எ-11)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சிவபாதம் ஜீவாகரன் என்பவருடைய தே.அ.அ.(821332923V)யும் லைசன்சும் (984894) கோண்டாவிலுக்கும் கோப்பாய்க்கும் இடையில தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள கீழ்க் காணும்முகவரியில் ஒப்படைக்கவும். N.சிவபாதம், பெரியவிளான், இளவாலை. 077-7041712 (17658)

Super Cup 50 மோட்டார் சயிக்கிளின் இலக்கத் தகடு WP-HD-3700 30-04-2003 அன்று சங்கானைகும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். வி.இலக்கம் 1881, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (17641)

தாவழை, இயற்றாலை, வரணியைச் சேர்ந்த பாலன் மகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (531123891V) முகமாலை சோதனைச் சாவடியில் 24-04-2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி உதவவும். (17623)

### விற்பனைக்கு

எம்மிடம் மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும். பொ. தருமராசா, 27, மெயின் வீதி, பருத்தித்துறை (வேலாயுதம் மகா வித்தியாலயம் முன்பாக). (சி-27757)

தொலைபேசிக்கூண்டு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.29, உடுவில் வீதி, மானிப்பாய்.
T.P.222 5412 (17619)

பாவனையிலுள்ள 12" கிறைண்டர் இரண்டு, 10Hp லீஸ்ரர் மெசின், பெரிய ஈர மெசின் No.37, நெல்லுடைக்கும் மெசின் (சோமசிறி), அரிசி தீட்டும் மெசின (No.7அல்லர்), 8அடி அச்சும் மற்றும் இவற்றுக்குரிய பெல்ற்றுகளும விற்பனைக்குண்டு. தொடர்பு: இந்திரனமில், உடுவில் வீதி, மானிப்பாய். (17625)

### காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 7 பரப்புக்காணி, நல்ல தண்ணீக கிணற்றுடன், வீடு கட்டி குறையிலுள்ள நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ஜெயசீலன், கற்பகதரு, தாவடிச்சந்தி (காலை 9.00 மணிக்கு முன்னர் சந்திக்கலாம்) (17635)

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் 4½/2 பரப்புக் காணி, கிணறு மற்றும் பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.அம்பிகை பாலன், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.. (17630)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் வசிக்கும் பெற்றோர் கனடாவில் தொழில் புரியும் நிரந்தர வதிவிட அனுமதியுள்ள 29வயது, மகம் 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற, 13¼ பாவமுள்ள தமது மகனுக்கு மெலிவிய அழகான மணப்பெண்ணைத் தேடுகின்றனர். படத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1880 C/o உதயன், யாழ்ப்பாணம். (17637)

### கொழும்புத்துறையில் திருட்டுக்கள் அதிகரிப்பு

கொழும்புத்துறை பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நெடுங்குளம் பகுதியில் நள்ளிரவு வேளை, வீடொன்றில் இருந்து 20பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

ஆள் அரவம் கேட்டு விழித்துக் கொண்ட வீட்டார் திருடனைப் பிடிக்க முயற்சித்தவேளை ஏற்பட்ட இழுபறியின் போது திருடன் அணிந்திருந்த அரைக்காற்சட்டையை கழற்றி விட்டு தப்பி ஓடிவிட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்திலும் விடுதலைப்புலிகளின் அலுவலகத்திலும் முறையிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை - கடந்த திங்களன்று இரவு கொழும்புத்துறை, விபுலானந்தா வீதியில் உள்ள வீடொன்றில் 3ஆயிரம் ரூபா பணமும் சிறுமி ஒருத்தி கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேதினம் இரவு பலசரக்கு கடை ஒன்றில் இடம்பெற்ற திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ம-30)


அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

புரோவினெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது.

PROVIN-X




- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்

யாழ். முகவர்:
ஜெகன் பார்மசி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மஸி
(பிள்ளையார் மருந்தகம்)
கிளிநொச்சி.



இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:
ARKEM COLOMBO
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk
(சி27733)

PROVIN - X தற்போது அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்

### கடன் இல: 2880 சீ.இ.

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

### (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி. இல: பீரி/நீர்ப்/பிஎஸ்/01 திகதி: 06.05.2003

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (I.B.R.D) கடன்வசதி, ஐ.டி.ஏ (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.
02. மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத்தொகுதி நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.
மீள்நிர்மாணம் - பிரதேச செயலக அலுவலக கட்டடம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
03. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000.00ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான, யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft), சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 09.06.2003ஆம்திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாக பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222-2632, தொலை நகரி: 021-222-2634

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 11.06.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.
அதே தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில், அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.
06. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு | வேலை விவரம் | கேள்விப்பிணை ரூபா | கேள்விஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை நிறைவேற்றப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| பீரி/நீர்ப்/பிஎஸ்/01 | மீள்நிர்மாணம் பிரதேச செயலக அலுவலக கட்டடம் சாவகச்சேரி யாழ்ப்பாணம். | 332,000/- | 1000/- | 12 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாணக்குறிப்புகள் 04ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாணம்.

(c/27754)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 18 01 1942



மண் நெகிழ 08 04 2003

அமரர்

## நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)

எம்முயிர்த் தெய்வமே – நீங்கள் எம்மை நீங்கி சென்ற சேதி இடியாக
எம் நெஞ்சில் விழுந்தது. துடித்து நின்ற விழிகள் துயர மழையில்
நனைந்தனவே இனி தனித்து விட்டோம் தயவாய் எம்மை
தாங்கி நிற்க யார் வருவார்? கனி அமுதாய் கலந்து மகிழ்ந்த வாழ்வு
கசந்ததுவோ! காலனிற்கும் உங்கள் உயிர்மேல் காதலோ?
சொல்லாமல் கொள்ளாமல் உமைத் தூக்கிச் சென்றால்
தாங்கிடுமோ எம் நெஞ்சம்! தவித்திருக்கும் நெஞ்சத்துடன்
தலைத்திருக்கும் உங்கள் அன்பு நினைவுகள் என்றும் நிலைத்து வாழும்.

08.04.2003 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த அமரர் நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.05.2003) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

உசன்
மிருசுவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்
பணிமனையின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திருமதி திலகராஜா ஜெகத்ஜனனி**
அவர்களின் திடீர் மறைவு எமக்கு மாறாத சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்நத அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் தெரிவித்துகொள்கின்றோம்.

பிரதேச செயலகம்
கோப்பாய். (சி-27787)
சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர் திரு. செ.செல்வராசாவின்
பாசமிகு மாமனார்
**பொன்னம்பலம் நடராசா**
அவர்கள் 06.05.2003 அன்று காலமானதையிட்டு துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தாவடி இந்து
தமிழ் கலவன் பாடசாலை.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.
(17687)

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும்
அரும்பாடுபட்டவரும் இன்றுவரை அறங்காவற் சபையின்
போசகராகச் செயலாற்றிவருபவருமான
**உயர்திரு.நாகலிங்கம் இராமச்சந்திரன்**
அவர்களின் அருமை மனைவி திருமதி இராசம்மா அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல பள்ளம்புல முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

சரவணை பள்ளம்புலம்
அருள்மிகு முருகமூர்த்தி
திருக்கோவில் (17688)
அறங்காவலர் சபை
ஆலயக்குரு, கிராமமக்கள்.

## விளையாட்டுக்கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே8

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சங்கானை சைவபிரகாச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடவிருப்பதால் இப்பிரதேச செயலங்களுக்குட்பட்ட விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவ்வப்பகுதி பிரதேச செயலக விளையாட்டு அலுவலகர்கள் கேட்டுள்ளனர். (ம-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே.8

வலிவடக்கு, வலிதெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழீழ விளையாட்டுத் துறையினர் விளையாட்டுக் கழகங்களின் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடவிருப்பதால் இப்பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களின் தலைவர், செயலாளர் உட்பட அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவ்வப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள் கேட்டுள்ளனர். (ம-5)

## யாழ்.மறைமாவட்டத்துக்கென
# 10 அருட்சகோதரர் இவ்வாண்டில் குருக்களாக திருநிலைப்படுத்தப்படுவர்

கொழும்புத்துறை,மே8

யாழ்.மறைமாவட்டத்தின் இவ்வாண்டுக்கான புதிய குருக்களாக 10 அருட்சகோதரர்கள் யாழ். ஆயர் மேதகு சவுந்தரநாயகம்ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அருட்சகோதரர்களான செ.றெ. றஞ்சிதராஜ், தே.ரவிராஜ், தி.றொ. வசந்தசீலன், மோ.சோபன் றூபஸ், சா.ஜஸ்ரின், சி.லியோ ஆம்ஸ்ரோங்ஸ, ம.த.சரத்ஜீவன், அ.அன்ரனி அமலராஜன், ம.கான்ஸ் போவர், செ. நேசநாயகம் ஆகிய 10 பேருமே புதிய குருக்களாக அபிஷேகம் செய்யப்படவுள்ளனர்.

முன்னைய 7பேரும் இம்மாதம் 14ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.ஆயரால் குருநிலைக்கு உயர்த்தப்படுவர்.

இம்மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் யாழ்.ஆயரால் இறுதி மூவருக்கும் குருப்பட்டம் வழங்கப்படும்.

இவர்கள் அனைவரும் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவ கல்லூரியில் இறையியல், மெய்யியல் கல்வியை மேற்கொண்டிருந்தனர்.

அதேவேளை, அமலமரித் தியாகிகள் சபையை சேர்ந்த அருட்சகோதரர்கள் கு.ஜெகத் பிரேம்நாத், செபமாலை மிக்கேல் பெரேரா ஆ. பேகஸ் வின்சன், அ.இன்பநாதன் ஆகியோரும் புதிய குருக்களாக ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டு வருகின்றனர்.

யாழ். மறைமாவட்ட வரலாற்றில் கூடிய எண்ணிக்கையானோர் குருக்களாக திருநிலைப்படுத் தப்படுவது இவ்வருடம் தான் என ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-30-51)

# துயர் பகிர்கிறோம்

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திரு. க.ரவீந்திரன் அவர்களின் பாசமிகு சகோதரனான
**கணபதிப்பிள்ளை சிவனேந்திரன்**
அவர்கள் கனடாவில் திடீர் மரணமெய்திய செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
பளை. (17682)
பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி கலாராணி இரவீந்திரன
அவர்களின் அன்புத் தந்தையார்
**சிற்றம்பலம் கனகசபை**
அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய். (17669)
அதிபர், ஆசிரியர்கள்
யா/நவாலி மகா வித்தியாலயம்.

# சந்நிதியான் ஆச்சிரம
## சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்படும்
# எழுச்சிவிழா

நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டாவது உலக இந்துமாநாட்டுக்கு அனுசரணையாக வடமராட்சி இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் எழுச்சிவிழா.

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்.
காலம் : இன்று (08.05.2003) வியாழக்கிழமை காலை 8 மணி
மங்கள இசை : L.S. ஜெயநாதன் குழுவினர்
வரவேற்புரை : க.அருள்லிங்கம (பேரவைத் தலைவர்)
ஆசி உரை : சுவாமி சித்ருபானந்தா
வாழ்த்துரை : பேரவைப் போஷகர்கள் பிரம்மஸ்ரீ ப.மனோகராக் குருக்கள்
சிவசிறீ கை.நமசிவாயக் குருக்கள்
தலைமை உரை : ஆ.சிவநாதன் ஆசிரியர்
பிரதம விருந்தினர் உரை : கௌரவ இந்து கலாசார அமைச்சர் திரு. தி.மகேஸ்வரன
விஷேட சொற்பொழிவு : தமிழக அறிஞர் முனைவர் இரா.செல்வக்கணபதி அவர்கள் "தண்டைச் சிற்றடி" (சென்னை)
இசைச் சொற்பொழிவு : கவிமணி க.ஆனந்தராசா (அதிபர்) (அன்னைதாசன்)
இசைக் கச்சேரி : திருமதி S.ஜெயகௌரி
செல்வி N.ஜெயபாரதி (பக்க வாத்தியசகிதம்)
நன்றியுரை : பேரவைச் செயலாளர் ந.அரியரட்ணம (அதிபர்)

விழாவினையொட்டி காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து திருமுறை ஏடுகள் மங்கள வாத்திய சகிதம் ஆச் சிரமத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். எழுச்சி விழாவில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இன்று 8.5.2003 வியாழக்கிழமை தொண்டைமானாறு சந்நதியான் ஆச்சிரமத்தில் எழுச்சி விழா நடைபெறுவதையொட்டி பருத்தித்துறை டிப்போ சகல இ.போ.ச.பஸ்களும் செல்வச்சந்நிதிக்கு வந்து சேவையை மேற்கொள்ளும் என்பதை அறியத்தருகின்றோம்)

சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டமானாறு. (C/27755)
சந்நிதியான் ஆச்சிரம
சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

சிவமயம்
குருவருள் துணை

# ஆசார்யாபிஷேக வைபவ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ மங்களமித சுபானு வருடம் சித்திரை மாதம் 23ஆம் நாள் (08.05.2003) வியாழக்கிழமை அமிர்த சித்தயோகமும் ஸப்தமி திதியும் பூச நட்சத்திரமும் அமைந்த காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

உத்தர கோவை
**பிரம்மஸ்ரீ பூரணானந்தக் குருக்கள் சுதாகர சர்மா** அவர்களுக்கு
(பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் ஆலயம், புலோலி சின்ன தேவனத்தாய் வீநாயகர் ஆலய பிரதம சிவாசார்யார்)

சமய விசேட நிர்வாண தீக்கையும் ஆசார்யாபிஷேக வைபவமும் கோவிற் கடவை விநாயகர் ஆலயத்தில் நிகழத் திருவருள்பாலித்துள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதமாக வருகை தந்து ஆசீர்வதித்து இவ்விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தீக்ஷா குரு : முத்தமிழ் குருமாமணி
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்** (கதிரமலை சிவன்தேவஸ்தானம்)

இங்ஙனம்

திருமதி பூரணானந்தக் குருக்கள்
குடும்பத்தினர்.
கந்தசாமி கோயில், கோப்பாய் வடக்கு.

சிவஸ்ரீ ஆ.கணேசக் குருக்கள்
கோவிற் கடவை விநாயகர் ஆலயம்,
கரவெட்டி.
(17638)


# 12,500/= இலிருந்து கணனிகள் விற்பனைக்கு



Pentium I, II, III

DOT MATRICS PRINTER 7,500/=

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் மலிவு விலையில் உங்கள் பட்ஜெட்டுக்குள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே நிறுவனம் SUN

**SUN COMPUTERS**
No.316, Hospital Road, Jaffna.
Tel. 2225208
(சி-27780)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை பராசக்தி

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 66, ஜி.பி.எஸ்.றோட் கல்வியங்காட்டில் வசித்துவருபவருமாகிய பொன்னுத்துரை பராசக்தி அவர்கள் 04.05.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா - அன்னப்பிள்ளையின் மகளும் காலஞ்சென்ற நாகமணி - தெய்வானைப்பிள்ளையின் மருமகளும் சிவபாலனின் (முன்னாள் மக்கள் வங்கி உத்தியோகத்தர், ஸ்ரான்லி வீதி கிளை) பாசமிகு தாயாரும் ஜெயராணியின் (முன்னாள் ஆசிரியை செங்குந்தா இந்துக் கல்லூரி) அன்பு மாமியாரும் முகுந்தன் (Offaw, University Canada) ஆதிரை (R.H., King Academy, Canada), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கணபதிப்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரோஜினிதேவி பூபாலசிங்கம், காலஞ்சென்றவர்களாகிய நடராஜா, வாமலை, லெட்சுமி, கனகாம்பிகை, பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் பிறேமாவதி, ஜனந்தாதேவி, கலைச்செல்வி (ஊர்ப்பு.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் ஞானச்செப்பால், குகதாசன் (கனடா), தயாளன், ஜனகன் (லண்டன்), சண்முகலிங்கம், பரராஜசிங்கம், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வாகீசன், சிந்துஜா, சைலஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2003) வியாழக்கிழமை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்த மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 66, GPS.Road,
கல்வியங்காடு (17686)
தகவல்:
பொ.சிவபாலன்
(மகன்)

## P.S.பிச்சையப்பா

('மதுரநாத கலைச்செம்மல்', 'இராகஞானகலாஜோதி', 'ஸ்ருதிநாதவாரிதி', 'முகவீணா நாதஸ்வரூபிணி')

அகில இலங்கை வானொலி புகழ் நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் சுழுநல்லூர் P.S.பிச்சையப்பா அவர்கள் 03.05.2003 சனி இரவு இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.05.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

239, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (சி-27789)
தகவல்:
P.S.P.ரவீந்திரன் (மகன்)
P.S.P.ரஜீவன் (மகன்)

# புலிகளின் மனித உரிமை மீறல்களை நிறுத்த சர்வதேச சமூக அழுத்தத்தாலும் முடியவில்லை

## ஜனாதிபதி கருதுகிறார் என ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,மே8

விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் சாத்தியப்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுகிறார் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

'ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளை பேச்சு மேசைக்கு மீண்டும் கொண்டுவருவதற்கும், அவர்களின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளை நிறுத்தச் செய்வதற்கும் சர்வதேச சமூகத்திற்கு முடியும் என்ற வாதத்தை அரசு முன்வைக்கின்றது. ஆனால், அது சாத்தியமற்றுள்ளது என்பதையே காணமுடிகிறது.

புலிகள், ஈபிடிபி. உறுப்பினர்களை கொலை செய்கின்றனர். அத்துடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவு அங்கத்தவர்களையும் கொலை செய்து வருகின்றனர். இந்நிலையில்,புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பி வருகின்றனர் என்ற வாதம் நகைப்புக்கிடமானதாகும்.

இராணுவ உளவுப்பிரிவு தமிழ் அங்கத்தவர்கள் கொலை செய்யப்படுவது அதிலும் கொழும்பில் வைத்துக் கொலைசெய்யப்படுவது நாட்டின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல. இது குறித்து உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

சுயாதீன பொலீஸ் ஆணைக்குழு தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் கூச்சல் போட்ட தற்போதைய அரசு, இப்போது சுயாதீன பொலீஸ் ஆணைக்குழுவுக்குத் தேவையான பொலீஸ் அதிகாரிகள் மற்றும் அடிப்படை வசதிகளைக்கூட செய்து கொடுக்காதிருக்கின்றது. சுயாதீன பொலீஸ் ஆணைக்குழுத் தலைவரை அழைத்து ஜனாதிபதி இது குறித்து விரைவில் ஆராயவுள்ளார்.

- இவ்வாறு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

# புலோலி தெற்கில் நேற்றிரவு விபத்து: வேகமாக வந்த டிராக்டர் குடிசை வீட்டினுள் புகுந்தது!

## சாரதி பலி; வயோதிபர் படுகாயம்!!

வடமராட்சி,மே8

வேகமாக வந்த டிராக்டர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாகப் பாய்ந்து சென்று குடிசை வீடு ஒன்றினுள் புகுந்தது. டிராக்டரைச் செலுத்தி வந்த சாரதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். குடிசைக்குள் இருந்த வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

புலோலி தெற்கு காந்தியூரில் நேற்றிரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தெருமுடிமடம் தம்பசிட்டி வீதி ஊடாக வேகமாக வந்த டிராக்டர் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. அருகே இருந்த வேலி ஒன்றுடன் மோதிப் பாய்ந்து தன்பாட்டில் சுமார் 30 யார் தொலைவுக்கு ஓடிச் சென்று அங்கிருந்த குடிசையினுள் புகுந்தது. டிராக்டரில் இருந்து தூக்கி வீசப்பட்ட சாரதி தலையடிபட தரையில் வீழ்ந்து உயிரிழந்தார்.

தம்பசிட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயம் என்று அழைக்கப்படும் சாரதியே உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

கட்டுபாட்டை இழந்து ஓடிய டிராக்டர் குடிசைக்குள் நுழைந்த போது அங்கு படுத்திருந்த நடராசா என்ற 77 வயதான வயோதிபர் படுகாயமடைந்தார். உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸார் நேற்றிரவு விசாரணை நடத்தினர். (ஐ-173)

# புலிகளே சீன 'ட்ரோலரை' தாக்கினர்; கடற்படைத் தளபதி அறிக்கை

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கடந்த மார்ச் மாதம் சீன மீன்பிடி 'ட்ரோலரை' விடுதலைப் புலிகளே தாக்கியழித்துள்ளனர் என கடற்படைத் தளபதி ஜனாதிபதிக்கு வழங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

### நம்பியார், ஜேக்கப் பிரதமருடன் சந்திப்பு

இந்தியாவின் முன்னாள் மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியார் இந்தியக் கடற்படையின் முன்னாள் பிரதித் தளபதி வைஸ் அட்மிரல் பி.ஜே.ஜேக்கப் ஆகியோர் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன , பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி கடற்படைத் தளபதி ஜனாதிபதியிடம் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். சீன மீன்பிடி ட்ரோலரைப் புலிகள் தான் தாக்கினர் என்பதற்கான காரணங்கள் உள்ளன. குறிப்பாக ட்ரோலர் தாக்கப்பட்ட இடம், தாக்கப்பட்ட விதம் என்பவற்றைப் பார்க்கும் போதும், தாக்குதல் தொடர்பாகப் பெறப்பட்ட சாட்சியங்களைப் பார்க்கும்போதும் இதனைப் புலிகள் தான் செய்தார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

தாக்குதலில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், ட்ரோலரில் இருந்து கடலில் குதித்து தப்பிச் சென்றவர்களையும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கொல்ல முற்பட்டுள்ளனர்.

- இவ்வாறு கடற்படைத் தளபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது -

இவ்வாறு அவர் சொன்னார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், புலனாய்வுப் பிரிவு அங்கத்தவர்களின் கொலைகள் என்பன தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்று அவரிடம் வினவப்பட்டது.

ஜனாதிபதி தமது நிலைப்பாடு தொடர்பாக தெரிவிப்பதற்கு முன்னர் அரசு இந்த நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க வேண்டும் அல்லது பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க வேண்டும். அப்போதுதான் தனது நிலைப்பாட்டை அவர் தெளிவாகக் கூறமுடியும் - என்று ஹரீம் பீரிஸ் பதிலளித்தார். (எ)

# வல்வை படுகொலை நினைவு வைபவம்

யாழ்ப்பாணம்,மே8

1985 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வல்வையில் படுகொலை செய்யப்பட்ட 36 அப்பாவிப் பொது மக்களை நினைவுகூரும் வைபவம் வல்வெட்டித்துறையில் நாளை மறு தினம் சனிக்கிழமை நடைபெற வுள்ளது.

வல்வெட்டித்துறை இலந்தைக்காடு அபிமன்யு நித்தி சனசமூக நிலையத்தில் நினைவுகூரல் நிகழ்வுகள நடைபெறும். வல்வையின் பல்வேறு பகுதிகளிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பொது மக்களே மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு குண்டுவைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் பொதுமக்களை நினைவுகூரும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட 36 அப்பாவிப் பொதுமக்களினதும் உறவினர்களை அன்றையதினம் அஞ்சலி செலுத்தவருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரவேங்கை நித்தியன் (ஜெயம்) 18 ஆவது ஆண்டு நினைவுநாள் வைபவமும் இடம்பெறும். (ஐ-6)

# புலிகளிடம் பல படைப்பிரிவுகள் உண்டு ஆனால் அவற்றை அங்கீகரிக்கமுடியாது!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

கொழும்பு,மே8

விடுதலைப் புலிகளிடம இராணுப் பரிவு, கடற்படைப் பிரிவு ஆகியவை உண்டு என்ற உண்மை எமக்குத் தெரியும். ஆனால், அவற்றை கடற்படையாகவோ இராணுவமாகவோ நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இப்படிக் கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

இந்தியாவின் முன்னாள் இராணுவத தளபதி சதீஷ் நம்பியாரைச் சந்தித்த பின் ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கின் அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு எம்மிடம் எவரும் கோரிக்கை விடுக்கவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயங்களின் பரப்பளவைக் குறைக்கும் படியே எம்மிடம் கேட்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலயங்களின் பரப்பளவைக் குறைத்து விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில், முன்னர் குடியிருந்த மக்கள் மீள்குடியமர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்போம்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் தனியார் வீடுகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையின்படி இராணுவத்தினர் வசமுள்ள வீடுகளின் எண ணிக்கையை 152 இலிருந்து 88ஆகக் குறைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள் ளது. இதன் மூலம் வெளியேற்றப்பட்ட இராணுவத்தினரை நிலைப்படுத்த 15 இடங்கள் ஏற்கனவே இனங் காணப்பட்டுள்ளன.

மேற்படி தீர்மானங்கள் அனைத்தும் சதீஷ நம்பியாரின் ஆலோசனையின்படி அமுல் செய்யப்படும் - என்றார். (ஐ-4)


உ

ஏழாலை தெற்கு, களபாவோடை

**ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

2ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இடம்பெறும் விசேட நிகழ்ச்சி

தலைவர் : கௌரவ இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன்

காலம் : நாளை (09.05.2003) வெள்ளிக்கிழமை

நேரம் : பிற்பகல் 3.00 மணி

விசேட பூஜை, பிரார்த்தனை, சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

சொற்பொழிவு ஆற்றுபவர்கள் :- சிவஸ்ரீ குமாரசாமி ஐயா
:- சிவப் பேச்சாளர் சிவமகாலிங்கம்
சிவச்செல்வி
:- புஸ்பா செல்வநாயகம்

அம்பாள் அடியார்கள் அனைவரையும் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை. (சி-27779) - தேவஸ்தானம்



2 ஆவது இந்துமாநாட்டு சிறப்பு நிகழ்வாக
அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை நடத்தும்

**இந்து சமய எழுச்சி விழா**

காலம் : 12.05.2003 திங்கட்கிழமை பி.ப. 3.00 மணி
இடம் : நல்லை ஆதீன கலாமண்டபம்
தலைவர் : சிவஸ்ரீ.க.கிருபானந்தக் குருக்கள்
(மேற்படி சபைத் தலைவர்)

**சைவ ஆகம கண்காட்சி**

யாழ்ப்பாண மாநில மாநாட்டு சிறப்பு நிகழ்வாக மே 9, 10 ஆகிய தினங்களில் நல்லை ஆதீனத்திற்கு அருகில் மேற்படி கண்காட்சி நடைபெறும்.

இங்ஙனம்
அ.இ.சை.கு.அ.சபை

(16789)



**ராஜா** யாழ்ப்பாணம்



இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்
**புதியகீதை**
10.30, 2.30, 6.30, 9.30
(C/27626)

**லிபேட்டி** அச்சுவேலி



விஜய், ஸ்நேகா நடித்த
**வசீகரா**
(ரீலை)
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சிவாஜி, பத்மினி நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

**லஷ்சுமி** இணுவில்
இன்றுமட்டும்
ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன் நடித்த
**அருணாச்சலம்**
தினசரி: 11.00, 3.00, 7.00
நாளைமுதல்
**என்னவளே**

**நாகம்ஸ்** சுன்னாகம்
மக்கள் திலகம் M.G.R, செயலலிதா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
**இரகசிய பொலீஸ் 115**
தினசரி காட்சிகள் : (ரீலை)
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)



**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

இடம் : நீர்வேலி முற்றவெளி சவாரித் திடல்.
காலம் : 11.05.2003 ஞாயிற்றுக்கிழமை.
நேரம் : பி.பகல் 2.00 மணி (S.L.T.)

நீர்வேலி
ஐக்கிய விளையாட்டுக் கழகம் - அமைப்பாளர்.
(C/27788)


## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் கஜமுகன்

உரும்பிராய் வடக்கு, 'நவசக்தி' சனசமூக நிலையத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் க.கஜமுகன் நேற்று (07-05-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் - வசந்தி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் கஜானன் (லண்டன்), கஜவதன், கனிஷ்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08-05-2003)வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவசக்தி சனசமூக நிலையம்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
கா.கனகரத்தினம்
(தந்தை)

(17685)

### தேசிய ஒருமைப்பாடு, சமாதானத்தை வலியுறுத்தி

# திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மே 14 முதல் 'மாபெரும் கலை மாநாடு'

## மூன்று தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே.8

யாழ்.திருமறைக் கலாமன்றம், எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதி ஆகிய மூன்று நாள்களும் முழுநாள் நிகழ்வுகளாக தேசிய ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் வலியுறுத்தும் 'மாபெரும் கலை மாநாடு' ஒன்றை நடத்தவுள்ளது.

இம்மூன்று நாள்களும் 'கலை விழா', 'சிறுவர் சமாதானப் பாசறை' மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களும் கலந்துகொள்ளும் 'திருமறைக் கலாமன்ற மாநாடு' ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இம்மாநாடு தொடர்பான விவரங்கள் நேற்றுப் பிற்பகல் மன்றக் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. மன்றத்தின் பிரதி இயக்குநர் ஜே. ஜோன்சன் ராஜ்குமார், எம்.சாம்பிரதீபன், மன்ற நிர்வாக அலுவலர் ஜி.பி.பேர்மினஸ் மற்றும் மன்ற ஊடக இணைப்பாளர் சி.செல்மர்எமில ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

முதலாம் நாள் நிகழ்வு கலை விழாவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திராவின் 'சிங்கபாகு' நாடகமும், ஜெரோம் டி சில்வாவின் 'என்னைப் பார்' (LOOK AT ME) நாடகமும், திருமதி சோமலதா சுபசிங்காவின் 'தொப்பி வியாபாரி' (HATS SELLER) என்ற சிறுவர் நாடகமும் மற்றும் மிரண்டா ஹேமலதா குழுவினரின் சிங்கள நாடக கலைவடிவங்களைச் சித்திரிக்கும் செயன்முறை விளக்க நிகழ்வும் இடம்பெறும்.

மேலும், வஸந்த ஒபயசேகராவின் இயக்கத்தில் உருவான திரைப்படமொன்றும் புதுவை அன்பனின் 'கரை தேடும் ஓடங்கள்' நாடகமும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இரண்டாம் நாளான எதிர்வரும் 15 ஆம் திகதியன்று 'சிறுவர் சமாதானப் பாசறை' என்ற தொனிப பொருளில் நிகழ்வுகள் இடம்பெறும்.இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் வடக்கு - தெற்கைச் சேர்ந்த சமாதான வலயத்திலிருந்து சுமார் ஆயிரம் சிறுவர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறுவர்களிடையே சமாதானம் தொடர்பான கருத்துப் பரிமாற்றம்முதலிய உள்ளார்ந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

பிற்பகல் 2மணி முதல் சிறுவர் கருத்துரை அமர்வு இடம்பெறும். இந்நிகழ்வில் சிறுவர்களின் கேள்விகளுக்கு, சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி,பாடசாலை அதிபர், பொலீஸ் அதிகாரி,விடுதலைப் புலிகளின் பிரதிநிதி, உளவளத் துணையாளர், சோவா அமைப்பின் பிரதிநிதி (ZOA), யுனிசெவ் பிரதிநிதி ஆகியோர் பதிலளிப்பர்.

பிற்பகல் 4மணியளவில் சிறுவர் எழுச்சி ஊர்வலம் ஆரம்பமாகும். வீரசிங்கம் மண்டபத்திலிருந்து கே.கே.எஸ்.வீதி,வைத்தியசாலை வீதி, கோவில் வீதி ஆகியவற்றினூடாக பிரதான வீதியை வந்தடையும் ஊர்வலம் மன்ற அலுவலகத்தை சென்றடையும்

வீதிகளில் ஊர்வலம் வருகையில் சிறுவர்கள், சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான பதாதைகளை தாங்கியிருப்பர். மேலும், கலாசார நடனங்களையும் அவர்கள் நிகழ்த்திக் காட்டுவர். தொடர்ந்து மன்ற அரங்கில் இடம்பெறும் கலை நிகழ்வுகளுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிறைவுபெறும்.

மூன்றாம் நாள், 'திருமறைக் கலாமன்ற மாநாடு' இடம்பெறும். இம்மாநாட்டில் இலங்கையின் அனைத்து திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களும் முதல் தடவையாக ஒன்று கூடுகின்றனர். திருமறைக் கலாமன்றத்தின் கடந்த கால கலை மற்றும் ஆன்மீகப் பணிகள் தொடர்பான விமர்சன ஆய்வு அரங்காக இவ் இறுதிநாள் அமையும். இவ் ஆய்வரங்கில் பேராசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் கலாமன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு விமர்சனங்களை நிகழ்த்துவர்.

மூன்றாம் நாள் நிகழ்வுகளின் இறுதியில் மன்ற அரங்கில் கண்காட்சி இடம்பெறும். ஒவ்வொரு கிளைக் கலாமன்றத்தினதும் செயற்பாடுகளை விவரிப்பதாக அக்கண்காட்சி அமையும். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

இம்மூன்று நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதற்காக தென்பகுதியில் இருந்து வருகை தரும் கலைஞர்களுக்கு போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளையும் மன்றம் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஏ-9)

## ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு பரீட்சை

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் உட்பட அனைத்து ஆங்கில ஆசிரியர்களுக்குமான பரீட்சை இன்று பிற்பகல் 2 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் அறிவித்துள்ளார். (ம-10)

## சமாதான முயற்சிகளின்......

(முதலாம் பக்கத் தொடர்சி)

அரசு ஆவலாக உள்ளது. அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறும் மாநாட்டில் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே பங்குபற்றுவதை உறுதி செய்யும் இணக்கப்பாட்டை விரைந்து ஏற்படுத்தும் நோக்கிலேயே நான் இங்கு வந்துள்ளேன்.

*கேள்வி:-* அரசும் புலிகளும் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிப்பர் என நீங்கள் நம்புகிறீர்களா?

*அகாஷி:-* அது எனக்குத் தெரியாது. ஆனால், சமாதானப் பேச்சுக்கள் இயன்ற விரைவாக ஆரம்பிக்கப்படுவதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

சமாதான நடவடிக்கைகளை உத்வேகப்படுத்துவதில் டோக்கியோ மாநாடு முக்கியமானது. எனவே, அதில் இருதரப்பும் பங்குபற்றச் செய்வதை இணங்க வைப்பதில் நாம் முயற்சிக்கின்றோம்.

*கேள்வி:-* உதவும் நாடுகள் கூட்டத்தில் இந்தியா பங்குபற்றுமா?

*அகாஷி:-* அது இன்னும் உறுதியாகவில்லை. இந்தியா நிலைமையை வெகு நெருக்கமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. இந்தியா உட்பட இன்னும் பல நாடுகள் இக்கூட்டத்தில் பங்குபற்றும் என நான் நம்புகின்றேன். (ஐ-உ-3)

## சதீஸ்..

(முதலாம் பக்கத் தொடர்சி)

வேறு விடயங்கள் தொடர்பாக என்னால் கருத்துக்கூற முடியாது. அதியுயர் பாதுகாப்பு விவகாரம் தொடர்பாகவே நான் முதற்கவனம் செலுத்தியிருக்கிறேன். இதுதொடர்பான யோசனை மாத்திரமே என்னிடம் கேட்கப்பட்டு இருக்கிறது - என்றார்.(ஐ)

# பேச்சைக் காட்டி....

(முதலாம் பக்கத் தொடர்சி)

நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

மீண்டும் ஒரு தடவை நாங்கள் இன்றைய அரசிடம் ஏமாறத் தயாராக இல்லை. இந்த அரசு உருப்படியான தீர்வுகளை மக்களுக்கு முன்வைக்க வேண்டும். அதை விடுத்து பேச்சுக்களைத் தொடர்வதாலும் தீர்மானங்களை நிறைவேற்றுவதாலும் அர்த்தமில்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை - அதாவது, எடுக்கப்பட்ட முடிவுகளை - நிறைவேற்றுவதற்கு அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஆனால், எடுக்கவில்லை. இதனால் ஏமாற்றம் அடைந்த நாங்கள் பேச்சுக்களை ஒத்திவைத்திருக்கிறோம்.

அரசுக்கு ஓர் இடைவெளியையும் கால அவகாசத்தையும் கொடுத்திருக்கிறோம். இந்தக் கால வெளியில் உருப்படியான நடவடிக்கை எடுத்து மக்களின் அவசர, அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.

குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். லட்சக் கணக்கான மக்கள் வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்து தங்கள் வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் திரும்பமுடியாமல் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த மக்கள் தங்கள் வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் திரும்பிச்செல்வதற்கான எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எமது மக்களின் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையைக் கொண்டது. இதையெல்லாம் ஒதுக்கிவிட்டு, அரசும் அரசின் துருப்புக்களும் தங்களது சொந்தப் பாதுகாப்பு, சொந்தத் தற்காப்பு என்ற ரீதியில் இந்தப் பிரச்சினையை அணுகுகின்றன. அதை விடுத்து, அதற்கு ஒரு தீர்வைத் தரவில்லை.

எங்கள் நாட்டிலுள்ள பிரச்சினையைக் கொண்டுபோய் வெளிநாட்டு இராணுவத் தளபதிகளிடம் கொடுத்து, அவர்களிடம் இருந்து சில சிபாரிசுகளை எதிர்பார்த்து இந்த அரசு காத்துநிற்கின்றது. இது அரசின் பலவீனத்தைத் தான் காட்டுகின்றது. இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத் தவறின் வெளிநாடுகள், அந்நிய நாடுகளின் உதவியை நாடி இன்றைய அரசு நிற்கின்றது. இது மிகவும் வருந்தத்தக்க விடயம்.

அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உப - குழு (சிரான்) ஒன்று இயங்குகின்றது. இந்தக் குழு இன்னமும் உருப்படியாகச் செயற்படவில்லை. இந்தக் குழு மூலமாக எமது மக்களுக்கு எந்தவித வேலைத் திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை. இதற்கு என்று வடக்கு - கிழக்கு புனர் வாழ்வு நிதியம் உருவாக்கப்பட்டது. இந்த நிதியத்துக்கே அரசு இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை. அங்கீகாரம் வழங்குவதில் சட்டப்பிரச்சினை இருப்பதாக கூறி இழுத்தடித்துக் கொண்டு இருக்கின்றது அரசு.

இப்படியாக ஒரு பிரச்சினையைத் தீர்க்காமல் - எந்தவொரு வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்காமல் - அரசு இழுத்தடித்துக்கொண்டே போகின்றதே தவிர எமது மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லை.

அரசு ஏன் இவ்வளவு அவசரப் படுகின்றதென்றால், அவர்களுக்குப் பொருளாதார உதவி தேவையாக உள்ளது. சமாதான சூழ்நிலையை ஒரு பரசாரமாகக் காண்பித்து, புலிகளுடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாக ஒரு மாயையைப் பிறப்பித்து, உலக நாடுகளிடமிருந்து உதவியைப் பெற்று, தென்னிலங்கையை வளர்க்க அரசு முயற்சிக்கின்றதே தவிர, எங்கள் மக்களின் பிரச்சினைகள் பற்றி அரசு சிறிதும் கவனம் எடுக்கவில்லை.

இந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சென்று பிரதமரிடமும் அரசுத் தரப்பிடமும் விளக்கி இதற்கு உருப்படியான பதிலை அவசரமாகத் தராவிட்டால் நாங்கள் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளமாட்டோம். ஆனால், மாறாக அவர்கள் உருப்படியான நடவடிக்கை எடுப்பார்களாயின் சமாதானப் பேச்சில் பங்குபற்றுவதற்றும் ஜப்பான் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்குமான முடிவு குறித்து பரிசீலனை செய்வோம் - இவ்வாறு தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய அகாஷி தலைமையிலான குழுவினரை விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன், செய்தித் தொடர்பாளர் தயா மாஸ்டர் ஆகியோர் வரவேற்றனர். அதன்பின் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்துக்கு முற்பகல் 11.30 மணிக்கு வந்து சேர்ந்த அகாஷி குழுவினரை தலைவர் பிரபாகரன் புன்முறுவலுடன் கைலாகு கொடுத்து வரவேற்றார். அதைத் தொடர்ந்து 11.35 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் பிற்பகல் 1.45 மணிவரை நீடித்தன. அதன்பின் தலைவர் பிரபாகரனுடன் அகாஷி குழுவினர் மதியவிருந்து உண்டனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பொருளாதர ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

தூதர் அகாஷியுடன் ஜப்பானின் கொழும்புக்கான தூதர் ஒட்சுகா, ஜப்பானின் வெளிவிவகார அமைச்சின் ஆசிய - பசுபிக் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் வந்திருந்தனர்.

தலைவர் பிரபாகரனுடனா பேச்சுக்களை முடித்துக்கொண்ட பின்னர் தூதர் அகாஷி கிளிநொச்சி வைத்தியசாலையையும், ஜப்பானின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள நடமாடும் வைத்திய சேவைத் திட்டப் பகுதியையும் பார்வையிட்டார்.

நேற்றைய சந்திப்பின் அடையாளமாக புலிச்சின்னமும் தமிழீழ வரைபடமும் பொறிக்கப்பட்ட நினைவுப் பொருள் ஒன்றை பிரபாகரன் அகாஷியிடம் வழங்கினார். அகாஷியும் பிரபாகரனுக்கு நினைவுப் பரிசு ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

அகாஷி தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலை 3.30 மணியளவில் கொழும்பு திரும்பினார். (ஐ-ர-8-4)


D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்
G.A.Q 1st in com
ECO - வரதராஜன்
ACC - முகுந்தன்
COM - உமாகாந்த்
MATHS - அம்பி
ENGLISH - யோகேஸ்
அரசியல் - கேதீஸ்வரன்
தமிழ் - அருணா
மெய்யியல் - உதயா
இந்து நாகரீகம் - ஸ்ரீஸ்
ஆரம்பம்: 10-05-2003 சனி 8.00
பல்கலைக்கழகப் பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்



புதிய பிரிவு
A/L 2005
LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்
சனி - காலை 7.00 மணி
BEACON
யாழ். நகர்



SUBRA
சித்தன்கேணி
GEOGRAPHY
2004 Paper Class
Mon. - Tu. - Fri. 6 - 7 a.m.
இலங்கை புவியியல்
ஆரம்பம் - 10.05.2003
காலை 6.00
2005 A/L
Mon. - Tu. - Thu. 4.30 - 6.00
By: S.Ainkaran
B.A. (Hons) Geo.



D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
B.Com
PART I
PART II
PART III
ஆரம்பம் 10-05-2003 சனி 6.15


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை குலசிங்கம்

(உரிமையாளர் - குலம் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம் - மானிப்பாய்)

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குலசிங்கம் அவர்கள் நேற்று (07.05.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவயோகம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், செல்வராணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடிச்சந்தி, மானிப்பாய்.* (சி-27773)

தகவல்:
கு.செல்வராணி
(மனைவி)


கொக்கா கோலா விற்பனை
உங்களுக்குத் தேவையான 300 மி.லீற்றர் (போத்தல்) 1500 மி.லீற்றர் (பிளாஸ்ரிக்) கொக்கா கோலா சோடா வகைகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 164, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரா சந்தி - யாழ்.வணிகர் சங்கத்துக்கிடையில் உள்ள சந்திக்கருகில்)
T.P. No. 0777 - 589608 (17675)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'எதிரிகளை நாட்டைவிட்டுத் துரத்தியடியுங்கள்!' ஒலிநாடாவில் சதாம் மக்களுக்கு வேண்டுகோள்



சிட்னி,மே8

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அனுப்பிய ஓடியோ ஒலிநாடா ஆஸ்திரேலியப் பத்திரிகைக்குக் கிடைத்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் வெளியாகும் 'சிட்னி மோர்னிங் ஹெறால்டு' பத்திரிகையின் பாக்தாத் நிருபர்களிடம் இரண்டு பேர் இந்த ஒலிநாடாவைக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

அரபியத் தொலைக்காட்சியான அல்-ஜசீரா நிருபர்களிடம் கொடுக்கமுடியாமல்போனதால் ஆஸ்திரேலியப் பத்திரிகை அலுவலகத்தில் அவர்கள் அந்த ஒலி நாடாவைக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

கரகரப்பான, மிகவும் களைப்படைந்த குரலில் அதில் சதாம் பேசியுள்ளார். இந்த ஒலிநாடா ஆஸ்திரேலியப் பத்திரிகை நிருபர்களுக்கு எப்போது கிடைத்தது என்ற விவரம் தெரியவில்லை.

"ஈராக் மக்களே! நம்முடைய பெருமைக்குரிய நாட்டிலிருந்துதான் நான் பேசுகிறேன். நீங்கள் மீண்டும் ஒன்றுதிரண்டு அமெரிக்கப் படைகளுக்கு எதிரான அதிரடித் தாக்குதல்களை ஆரம்பியுங்கள். நம்முடைய போராட்டத்தை மீண்டும் உலகுக்குக் காட்டுவோம். எதிரிகளை நாட்டைவிட்டுத் துரத்தும்வரை ஓயமாட்டேன்.

"நம் நாட்டின் பெருமைக்குரிய தேசிய அருங்காட்சியகத்தைக் கொடு மையாகச் சேதப்படுத்தி அதிலிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதற்கு அமெரிக்கப் படையினர்தான் காரணம். அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும்" - என்று அந்த ஒலி நாடாவில் சதாம் பேசியுள்ளார்.

அந்த ஒலிநாடா ஈராக்கைச் சேர்ந்த 13பேரிடம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருமே அந்தக் குரல் ஏறக்குறைய சதாமின் குரலாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர். (ம)

# பேரழிவு ஆயுதங்களைப் பதுக்கிவைக்க ஈராக் இழுவைப் பெட்டிகளைப் பயன்படுத்தியதா?

## அமெரிக்கப் புலனாய்வுத்துறை சந்தேகம்

நியூயோர்க்,மே8

உயிரியல், இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதற்கோ களஞ்சியப்படுத்தி வைப்பதற்கோ உழவு இயந்திரங்களின் இழுவைப் பெட்டிகளை நடமாடும் ஆய்வுகூடங்களாக ஈராக் பயன்படுத்தியதாக அமெரிக்கப் புலனாய்வுத் துறை சந்தேகம் தெரிவித்துள்ளது.

கட்டடங்கள், இராணுவ நிலைகள் பலவற்றில் இரசாயன ஆயுதங்களைத் தேடிய ஐ.நா.சர்வதேச ஆயுதப் பரிசோதனையாளர்களுக்குத் தெரியாமல் அவற்றை வைத்திருக்க உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

ஈராக்மீது அமெரிக்கத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் இத்தகைய நடமாடும் ஆய்வுகூடங்கள் இயங்கிவந்ததாக புலனாய்வுச் செய்திகள் தெரிவிப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்தார்.

ஆனால், பல நடமாடும் இரசாயன, உயிரியல் ஆய்வுகூடங்கள் பற்றி சந்தேகிக்கப்பட்டாலும் அவை பொய்யானவை என்று பின்னர் தெரியவந்துள்ளன. ஆனால், சில சந்தேகத்துக்கிடமாக உள்ளன. பேரழிவு ஆயுதங்கள் எவற்றையேனும் இதுவரை தம்மால் கண்டுபிடிக்க முடியாமைப் போனமை பற்றி தான் முற்றுமுழுதாக விரக்தியடைந்துவிடவில்லை என்று கொலின் பவல் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இதேவேளை -

பேரழிவு ஆயுதத் திட்டங்களுடன் தொடர்புபட்ட ஈராக்கிய விஞ்ஞானிகளுக்கு நிதியுதவி போன்ற உதவிகளை வழங்குவது பற்றி அமெரிக்கா ஆலோசித்துவருவதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் செவ்வாயன்று பாரிஸ் நகரில் தெரிவித்தார்.

சோவியத் ஒன்றியம் உடைந்த பின் ரஷ்யாவினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் விஞ்ஞானிகளுக்கு இவ்வித ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.

ஈராக் விஞ்ஞானிகள் நாட்டைவிட்டு ஓடிச்சென்று வேறு ஏதேனும் ஒரு நாட்டுக்கு தமது சேவைகளை வழங்கக் கூடும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். ஈராக்கில் சுமார் ஆயிரம் விஞ்ஞானிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈராக் தலைமை நிர்வாகப் பதவிக்கு புஷ்ஷினால் பிறிமர் நியமனம்

ஈராக்கின் சிவில் நிர்வாகத்துக்கு தலைமை நிர்வாக பதவிக்கு முன்னாள் இராஜாங்கத் திணைக்கள அதிகாரி போல் பிறிமர் ஜனாதிபதி புஷ்ஷினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் ஜே.கார்னரின் அதிகாரங்களை விடவும் இவர் அதிக அதிகாரங்களைக் கொண்டவராக இருப்பார். 61 வயதான பிறிமர் ஜனநாயக நடைமுறைகளுக்கு ஈராக் திரும்புவதற்கான பணிகளில் ஈடுபடுவார் முதலில் ஒரு நீண்டகால நிர்வாகத்தை அமைப்பதே இவரின் முக்கிய பணியாகும்

பழைமை விரும்பியான பிறிமர், இராஜாங்கத் திணைக்களத்தின் ஜெரி என்னும் பெயருடன் பயங்கரவாத முறியடிப்புப் பிரிவின் தலைவராக முன்பு கடமையாற்றியவர். பல்வேறு இராஜதந்திரப் பதவிகளையும் வகித்தவர். இவர் எடுத்த கருமங்களை எப்படி நிறைவேற்றலாம் என்பதை நன்கு அறிந்தவர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விமானம், ரயில் போக்குவரத்தை ஆரம்பிக்க இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் விருப்பம்

இஸ்லாமாபாத்,மே8

இந்தியாவுடன் தூதரக உறவுகளை மீண்டும் ஏற்படுத்தத் தயார். அதேபோன்று விமானம், ரயில், பஸ் போக்குவரத்துக்களையும் ஆரம்பிக்கத் தயார் என்று பாகிஸ்தான் பிரதமர் மீர் ஜபருல்லா கான் ஜமாலி அறிவித்துள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவா தத்தைக் கைவிட்டால் பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தத் தயார் என்று பிரதமர் வாஜ்பாய் அறிவித்தார். இதைத் தொடர்ந்து பேச்சு நடத்துவதற்காக இஸ்லாமாபாத்துக்கு வருமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு பாகிஸ்தான் பிரதமர் மீர் ஜபருல்லா கான் ஜமாலி முறைப்படி அழைப்பு விடுத்தார்.

இதனிடையே, நாடாளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பாய் ஓர் அறிக்கையைத் தாக்கல்செய்யும்போது "பாகிஸ்தானுடன் தூதரக உறவுகள், விமானம், ரயில், பஸ் போக்குவரத்து ஆகியவற்றை மீண்டும் ஏற்படுத்தத் தயார்" என்று அறிவித்தார்.

இதன் பின்னர் இந்தியாவுடன் நடைபெறவுள்ள பேச்சுக்களில் பாகிஸ்தானின் உத்திகளை வகுப்பது குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி, நேற்றுமுன்தினம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் பேச்சுக்கான உத்திகளைத் தயாரிக்க பிரதமர் ஜமாலிக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி நேற்றுமுன்தினம் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கும்போது கூறியதாவது:-

இந்தியாவுடன் தூதரக உறவுகளை மீண்டும் ஏற்படுத்தத் தயார். இந்தியாவுடன் விமானம், ரயில், பஸ் போக்குவரத்துக்களை மீண்டும் ஏற்படுத்தத் தயார். இதன்மூலம் காஸ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்து உண்மையான பேச்சு நடைபெற வழியேற்படும்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே விளையாட்டுப் போட்டிகளை மீண்டும் நடத்துவது அவசியம். ஆரம்பத்தில் கிரிக்கெட், ஹொக்கி ஆகிய போட்டிகளை ஆரம்பிப்பதன்மூலம் இந்த உறவுகளை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

இந்திய மீனவர்கள் 26 பேரை நல்லெண்ணத்தின் அடிப்படையில் விடுதலைசெய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். இரு நாடுகளுக்கிடையே வர்த்தக உறவுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வர்த்தகப் பட்டியலில் 78 பொருள்கள் இடம்பெறும்.

இந்த ஆண்டு முடிவடையும் முன்பாகவே சார்க் உச்சி மாநாட்டை பாகிஸ்தானால் நடத்த முடியும். இதே போன்று தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளையும் விரைவில் நடத்தமுடியும்.

இந்தியாவுடன் அணு ஆயுதம், வர்த்தகம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்த பாகிஸ்தான் விரும்புகிறது. திறந்த மனதுடன் பேச்சு நடத்த நாங்கள் தயாராகி வருகிறோம்.

காஸ்மீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காக பிரதமர் வாஜ்பாய் தனிப்பட்டமுறையில் முயற்சி செய்துவருவதால் இந்த முறை பேச்சு வெற்றிபெறும் என நான் நம்புகிறேன்.

- இவ்வாறு ஜமாலி கூறியுள்ளார். (ம)

### பக்தாத் அருங்காட்சியகத்தில்

# சூறையாடிய பொருள்களை மீள ஒப்படைக்க வலியுறுத்து

நியூயோர்க்,மே8

ஈராக் அரும் காட்சியகத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை வேறுயாரும் வைத்திருக்க அனுமதிக்கக்கூடாது. அவை கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக ஈராக் அரும் காட்சியகத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்பதை உலக நாடுகளுக்கு வலியுறுத்தி ஐ.நாவில் தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

போருக்குப்பின் பக்தாத்தில் உள்ள அரும் காட்சியகம் சூறையாடப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க பொருள்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது விற்கப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்கா கருதுகின்றது. இந்நிலையில், ஐ.நாவில் புதிய தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

★பக்தாத் அரும் காட்சியகத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யவேண்டும்.

★அதுபோன்ற கலைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக ஈராக் அரும் காட்சியகத்தில் ஒப்படைத்துவிடுங்கள்.

இதுபோன்ற கோரிக்கைகளை சர்வதேச நாடுகளுக்கு அமெரிக்கா முன்வைத்துள்ளது. இதுதொடர்பான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டால் அது நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்டர்போல் பொலீஸ் அமைப்பு ஈராக் கலைப் பொக்கிசங்களைத் தேடும் பணியை முடுக்கிவிட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு வளைகுடாப்போர் வந்தபோதும் இதேபோல் பக்தாத் அரும்காட்சியகம் கொள்ளையடிக்கப்பட்டது. எனினும், அவற்றில் பெரும்பாலானவை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இந்தமுறை அதே போல் கிடைக்குமா என்பது சந்தேகம்தான் என்று தொல்லியல் அறிஞர்கள் கூறுகின்றனர். (ம)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் திரிபுராவில் 22பேர் உயிரிழப்பு!

திரிபுரா,மே8

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் நடத்திய இருவேறு தாக்குதல்களில் 22 பேர் கொல்லப்பட்டனர். 8 பேர் காயமடைந்தனர்.

மேற்குவங்க மாநிலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பழங்குடியின மக்கள் அண்டை மாநிலமான திரிபுராவின் சிம்னாச்சாரா என்ற கிராமத்துக்கு வந்து குடியேறியுள்ளனர்.

இவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு வலியுறுத்திவரும் நிலையில், நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாதிகள் சிலர் கிராமத்தில் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர். திரிபுரா மாநிலத்தில் இயற்கை வளங்களை குடியேறியவர்கள் சீரழித்துவருவதாக அப்பகுதி பழங்குடியினர் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், அகர்த்தலாவில் இருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சிம்நாச்சாரா கிராமத்தில் நள்ளிரவில் புகுந்த சிலர் அங்கிருந்தவர்களைச் சரமாரியாகச் சுட்டுக்கொன்றனர்.

இதேகிராமத்தின் மற்றொரு பகுதியிலும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த இரண்டு சம்பவங்களிலும் 22 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு திரிபுரா அனைத்துப் புலிகள் படை அமைப்பினர்தான் காரணமாக இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ம)

# பலஸ்தீன துப்பாக்கிதாரிகளால் யூதக் குடியேற்ற வாசி கொலை!

கடந்த திங்கள் இரவு மேற்குக்கரைப் பகுதியின் கார் ஒன்றின்மீது பாலஸ்தீன துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் யூதக் குடியேற்றவாசியான விக்ரமன் என்பவர் கொல்லப்பட்டார். அவரது 6 வயது மகள் காயமடைந்தார்.

அல்-அக்ஸா மாவீரர் பிரிக்கேட் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. கடந்த 31 மாதங்களுக்கு முன்பாக தாக்குதல்கள் ஆரம்பித்ததில் இருந்து மேற்குக்கரை, காஸா பகுதிகளின் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் மீதே பாலஸ்தீனர்கள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் நடந்த மறுதினமான செவ்வாயன்று இஸ்ரேலியப் படையினர் ஹெப்ரோன் நகரில் பல தாக்குதல்களை நடத்தியவரான நூர்ஜபாரைக் கைதுசெய்தனர். பின்னர் அவரின் வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கினர்.

இதேவேளை, மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான மத்தியகிழக்கு நாடுகளுக்கு கொலின் பவல் சுற்றுலா செல்லவிருக்கிறார். (ம)

# சீன தொழிலதிபரின் விநோத விளம்பரம்!

திருமணம் செய்துகொள்ள 20 முதல் 25 வயதுக்குட்பட்ட 'கற்புள்ள பெண் தேவை' என்று வெளியிடப்பட்ட விளம்பரத்தைப் பார்த்து சீனாவில் 5 ஆயிரம் பெண்கள் அதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

சீனாவில் ஷாங்காய் நகரைச் சேர்ந்த கோடீஸ்வரர் பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியிட்டார். தனது பெயரை வெளியிட மறுத்துவிட்ட அந்த தொழிலதிபருக்கு வயது 35தான். ஆனால்; தனது சொத்து மதிப்பு 12.8 மில்லியன் டொலர் என்றுமட்டும் அவர் தெரிவித்தார். நான் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். எனக்குக் கற்புள்ள பெண் தேவை. 20 வயதிலிருந்து 25 வயதிற்குள் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று விளம்பரத்தில் கூறியிருந்தார்.

அந்த விளம்பரத்தைப் பார்த்து 5 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக சம்பந்தப்பட்ட பத்திரிகை நேற்றுமுன்தினம் தெரிவித்தது. விண்ணப்பம் செய்தவர்களில் கடைசியாக 30 பேரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் தொழில் அதிபர். அடுத்தவாரத்தில் இவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவுள்ளனர். இதுகுறித்து தென் சீன மோர்னிக் போஸ்ட் பத்திரிகை கூறுகையில்:-

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் 30 பேரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவார்களா என்பது தெரியவில்லை. அதற்குப் பெண்களும் ஒப்புக்கொள்வார்களா என்பதும் கூற முடியாது என்று தெரிவித்துள்ளது.

கோடீஸ்வரரின் இந்த விளம்பரத்துக்கு சீனாவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தொழில்சார் பயிற்சி போதனாசிரியர்களுக்கான
# பணிநிலை வெற்றிடம்

நிக்கோட் (Necord) அனுசரணையுடன் வூஸ் (WUSC) நிறுவனம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தபடவுள்ள பின்வரும் தொழில்சார் பயிற்சி நெறிகளைக் கற்பிக்கக் கூடிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேசன் தொழில்நுட்பம (Masonry) - 08 வெற்றிடங்கள்
2. தச்சு தொழில்நுட்பம் (Carpentry) - 08 வெற்றிடங்கள்
3. நீர்க்குழாய் இணைப்பு (Plumbing) - 08 வெற்றிடங்கள்
4. வீட்டு மின் இணைப்பு (House Wiring) - 09 வெற்றிடங்கள்
5. மின்னொட்டு (Welding) - 08 வெற்றிடங்கள்

**பணிநிலை 01**

பிரதான போதனாசிரியா (Main Instructor)

**தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பக் கல்லூரியில் குறிப்பிட்ட கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழ் (குறைந்தது 02 வருடங்கள்) அல்லது அதற்கு சமனான துறைசார் தொழிநுட்ப சான்றிதழ்.
- கற்பித்தல் முன் அனுபவம்.

**பணிநிலை 02**

உதவி போதனாசிரியர் (Assistant Instructor)

**தகைமைகள்**

- அனுபவம் தொடர்பான தொழில் தகைமை சான்றிதழ்.
- குறிப்பிட்ட தொழில் துறையில் ஆகக் குறைந்தது 05 வருட துறைசார் அனுபவம.

நியமனம் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முழு விவரங்கள் அடங்கிய சுயவிவரக் கோவை, உறவு அல்லாத இருவரின் சிபாரிசுடன் எதிர்வரும் 10.06.2003 இற்கு முன்னதாகக் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மாவட்ட இணைப்பாளர்**
பிராந்தியக் காரியாலயம்,
கனேடிய உலக பல்கலைக்கழக சேவை,
கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
(C/27781)

## ஷெல், முண்டாகாஸ் விலை குறையும

அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் ஷெல், முண்டாகாஸ் விலை குறைகப்படும் என்று அந்நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். விலை குறைப்பு சுமார் 100ரூபா வரை இருககலாம் எனவும் கூறப்படுகின்றது.

உலகச் சந்தையில் காஸின் விலை தற்பொழுது குறைந்திருப்பதை அடுத்தே இங்கும் காஸின் விலை குறைக்கப்படவிருக்கின்றது. புதிய காஸ் கையிருப்பு கிடைத்ததும் விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## வீதிக்குப் புதிய பெயர்

பண்டத்தரிப்பு பிரான்பற்று விளாவெளி மயான வீதிக்கு தம்பித்துரை வீதி என பெயர் சூட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் சபை உறுப்பினராக இருந்து நீண்ட காலம் சேவையாற்றிய அமரர் தம்பு தம்பித்துரையைக் கௌரவிக்கும் பொருட்டே விளாவெளி மயான வீதிக்கு தம்பித்துரையின் பெயர் சூட்ட தீர்மானிக்கப்பட்டது. மானிப்பாய் பிரதேச சபை இதற்கான அனுமதி வழங்கியுள்ளது. (ம-185)

## படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் உண்டு.

பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

**BHARATHI PATHIPPAKAM**
**OFFSET PRINTERS**
*430, K.K.S. ROAD, JAFFNA.*
(சி-27785)

## நெஞ்சை நெருடும் ஜனாவே...



02.05.2003 வெள்ளிக்கிழமையன்று அகால மரணம் அடைந்த ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடமைபுரிந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திருமதி திலகராஜா ஜெகத்ஜெனனி**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிரதேச செயலகம்,* சமுர்த்தி முகாமையாளரும்.
*வேலணை* (சி27786) உத்தியோகத்தர்களும்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 18 - 04 - 1946



உதிர்வு 10 - 04 - 2003

## அமரர் கணபதி நல்லதம்பி

எமது குடும்பத்தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (09.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"பொதிகை",*
*அண்ணா சிலையடி, கரணவாய்.*
- குடும்பத்தினர்.
(17680)

## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**

அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.



பஜாஜ் - எனது மூத்தவன்

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது காவலன்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:

- 1748,கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134 ■ 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222 ■ 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
- நீலம் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662 ■ 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ். 025-25050 ■ தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
- இல. 115, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527 ■ பிராந்திய அலுவலகம் இலக்கம் 72, நகரசபைக் கட்டிடம், பார்க் வீதி, நுவரெலியா 052-35760, 052-35781

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர் ____________________

விலாசம் ____________________

சேவை நிலையம் ____________________ தொலை பேசி ____________________

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka

# NORTH ICE INDUSTRIES

முன்னர் கடற்கரை வீதி, பாஷையூரில் இயங்கி வந்த எமது ICE உற்பத்தி நிலையம், மீண்டும் தற்போது இல.18, ஈச்சமோட்டையில் இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு பெரு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*இல.18,*
*ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (17670) -முகாமையாளர்.
0776001673

## வடமராட்சி கிழக்குப் பகுதி மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வடமராட்சி கிழக்குப் பகுதி உயர்தர வகுப்பு மாணவர்கள் சிதம்பரக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் (கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுகள்) பயில முன்வருமிடத்து விசேட சலுகைகள் வழங்க (இலவச தங்குமிட, உணவு வசதி) உத்தேசித்துள்ளது. ஆண், பெண் ஆகியோருக்கு தனித்தனியான விடுதி வசதிகள் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனடைய விரும்புவோர் உடனடியாக கல்லூரி அதிபரைச் சந்தித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி,
(17668) பழைய மாணவர் சங்கம்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### *தனியார் பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்ளுவதற்கான விண்ணப்பம்*

புனரமைக்கப்படும் யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்கக்கூடிய பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்ற தனியார் பாதுகாப்புச் சேவையினரிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாதுகாப்புப் பணியில் பகல் 2 பேரும், இரவு 4பேரும் பணியிலீடுபடல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் நிறுவனம் மாநகரசபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சேவை விவரம், சம்பளம் அங்கீகாரம் பெற்றமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் போன்றவற்றுடன் யாழ். மாநகர ஆணையாளருக்கு 19-05-2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
30-04-2003

(சி-27751)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால்
துணைவேந்தரின் இல்லமாகப் பயன்படுத்துவதற்காக்

### வீடொன்றை குத்தகைக்குப் பெறல்

துணைவேந்தரின் இல்லமாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்குவீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்குக் கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

01. பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி வளாகத்திலிருந்து நான்கு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தினுள் அமைந்திருத்தல் வேண்டும்.
02. தள பரப்பளவு ஆகக் குறைந்தது 2,500 சதுர அடி ஆவது இருத்தல் வேண்டும்
03. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. வீட்டின் முன் பக்கம் வாகனங்கள் தங்கி நிற்கும் இடவசதி, பூந்தோட்ட இடவசதி உடையனவாக இருத்தல் நன்று.
05. தொலைபேசி வசதி இருத்தல் விரும்பத்தக்கது.
06. மின்சாரம், குழாய் நீர் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
07 குத்தகைக் காலத்தின் போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 2003-05-31ஆம் திகதிக்கு முன்னர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துணை வேந்தரின் பாவனைக்காக வீட்டைக் குத்தகைக்கு விடல்" என எழுதப்படல் வேண்டும்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
*2003-05-05.* (சி-27770) **-பதிவாளர்.**

## இதய அஞ்சலி

நல்லூர் சைவமகா சபையின் ஆஸ்தான முகவீணை வித்வான்

### அமரர் P.S.பிச்சையப்பா

அவர்களுக்கு எமது இதய அஞ்சலி!

நல்லூர் கந்தன் உற்சவத்தின் மேற்கு வீதியிலே எங்கள் சைவ மகா சபையின் தெய்வீக இசைப்பேருரை அரங்கை அலங்கரித்து ஓங்கி ஒலித்த உன் தன்னிகரில்லா முகவீணாவின் ஒலிதனை எப்போது கேட்போம் ஐயா? நாதம் ஓய்ந்ததோ! நாங்கள் என்செய்வோம்?

*நல்லூர்* (17671) - சைவமகா சபையினர்.

## சீருடை முத்திரைகளை உடன்பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே8

பாடசாலைச் சீருடைக்கான கூப்பனகள் கிடைக்காத பெற்றோர்களை, உடனடியாக தமது வட்டார கிராம அலுவலரைச் சந்தித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் திருமதி பி.எல்.திலகநாயகம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பாடசாலைச் சீருடைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகித்து முடிக்கப்பட வேண்டுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளதாகவும் -

எனவே, கூப்பன்களை பெற்றுக் கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் - அவர் மேலும் கேட்டுள்ளார்.

(எ-9)

## அளவுக்கு மீறி கள் வைத்திருந்தோருக்கு ரூ.6 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம்,மே8

வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேல் கள் வைத்திருந்தமை மற்றும் விற்பனை அனுமதியின்றி அதனை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் ஏழுபேருக்கு யாழ். நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

கடற்கரை வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த பரமு தவராசா என்பவருக்கு 500 ரூபாவும், பழம்வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த நாகேசு செல்லத்துரை என்பவருக்கு 500 ரூபாவும், யாழ் மடம்வீதியைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து, தெய்வேந்திரம், சபாலசிங்கம், பாலயோகினி, பாக்கியநாதன் - சகாயரஞ்சினி மற்றும் தெய்வேந்திரம் சுசலாதேவி ஆகியோருக்கு தலா ஆயிரம் ரூபாவும், புதுவீதி கொககுவிலைச் சேர்ந்த இலங்கையன் விநாயகமூர்த்தி என்பவருக்கு 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. இ.விநாயகமூர்த்திக்கு மேலதிகமாக 500 ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராசா உத்தரவிட்டார்.

(ம-5)

## இரண்டாவது வருட நினைவஞ்சலி



அமரர்
### நாகராஜா ஸ்ரீதரன்
(கிருஸ்ணா அப்பள உரிமையாளர்)

ஈராண்டுகள் ஓடிமறைந்திடினும் தொடர்ந்தும் உங்கள் பசுமையான நினைவுகளோடு வாழ்கின்றோம்.

*புலவனார் வீதி,*
*கல்வியங்காடு.* (17659) குடும்பத்தினர்.

## G.A.Q., 1ST IN COM.

### யாழ்.பல்கலைக்கழகம்(வெளிவாரி)

வெளிமாவட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

**புதிய பிரிவு ஆரம்பம்: 10.5.2003**

பதிவுகள், நேர அட்டவணைகள் தொடர்பான சகல விரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:
**S.அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(17657)

## முதல் திங்கள் நிறைவில் நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் **திரு.சு.பரம்தில்லைராஜன்** அவர்களின் அன்பிற்கினிய மாமனார் – பிரபல வர்த்தகர்



அமரர்
### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

அவர்கள் இயற்கையெய்தி முதல் திங்கள் நிறைவில் அவரை நினைவு கூருவதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கும்....

(17571)

கிளி/பளை மத்திய கல்லூரி,
பளை.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 471 |
| திகதி | 06.05.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**4904239-4917902**

**வெற்றி இலக்கங்கள்** 21 40 44 51

**லக்கினம்** மகரம்

**ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை.**



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,669,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 299,411 | 10 | 2,994,110 |
| 2 இலக்கங்கள் | 27,490 | 20 | 549,800 |
| 1 இல + லக்கினம் | 27,406 | 30 | 822,180 |
| 2 இல + லக்கினம் | 2,482 | 100 | 248,200 |
| 3 இலக்கங்கள் | 726 | 500 | 363,000 |
| 3 இல + லக்கினம் | 68 | 5,000 | 340,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 357,587 | - | 5,717,290 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **5,717,290/-**

தொடர் இல. 5899633க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மே 09ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4915478-4-73**
**4908037-4-44**
**4906299-0-08**
**4904368-4-87**
**4907672-7-23**

## விநியோகப் பையன்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனத்தில் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு விநியோகப் பையன்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15-05-2003 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 1883
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(17665)

## நியந்த்ரீ
### சிவன் கோயில், நல்லூர்

2001/2002 காலப்பகுதியில் ஆச்சார்ய அபிஷேகம், உபநயன பிரம்மோபதேசம் செய்துகொண்ட அந்தண சிரேஷ்டர்கள் மற்றும் தேசிய மாகாண மட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி முதல் மூன்று நிலைகளில் இடம்பிடித்த அந்தண சமூகத்தினர் தங்களது விவரங்களை 23.05.2003ஆம் திகதிக்கு முன்னதாக, "செயலாளர், நியந்த்ரீ சிவன் கோயில், நல்லூர்" என்னும் முகவரிக்கு தெரிவிக்கவும்.

செயலாளர்.

(27784)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ சத்திய சாயிபாபா சங்கத்தின் தலைவராக இருந்து இளைப்பாறியவரும் தொடர்ந்தும் சாயி சேவைப் பணியாற்றிவருபவருமான

### சாயி அன்பர் உயர்திரு. வே.சேனாதிராசா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் பல வருடங்களாகக் குடி தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்ட எமது கிராம மக்களின் பரிதாபத்தைக் கண்டு அவர்களில் அன்பு வைத்து ஸ்ரீ சத்திய சாயி சங்கத்தினால் ஒரு குழாய்க் கிணறும், தொட்டிகளும் குழாய்களும் அமைத்துத் தந்தார். அது மட்டுமல்லாமல் அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களினால் நன்கொடையாக நாற்பத்து மூவாயிரம் ரூபா வரை பெறுமதி வாய்ந்த நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் கார்த்திகை மாதம் நடைபெற்ற இந்த நீர் விநியோகத் திறப்பு விழாவில், வடமராட்சி தென் மேற்குப் பகுதிப் பிரதேச செயலரும் கரம்பான் கிராம உத்தியோகத்தரும், கிராமத் தலைவரும், மதகுருமாரும் ஸ்ரீ சத்திய சாயி பாபா சுவாமிகளின் கருணையையும் இவரது தன்னலமற்ற பணியையும் அளப்பரிய சேவையையும் பெரிதும் பாராட்டினார்கள். மேலும் மலசலகூட வசதிகளின்றிப் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிய இக்கிராம மக்களுக்கு இரு மலசலகூடங்களை தனதும், தனது நண்பர்களதும் நன்கொடை உதவிமூலம் அமைத்துத் தந்துள்ளார்.

இத்தகைய அளப்பரிய சேவைகளுக்குரிய உயர்திரு.வே.சேனாதிராசா அவர்களுக்கும் சாயி அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்வதுடன், ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் கருணையை வியந்து தோத்திரிக்கின்றோம்.

இந்தப் பெரியார் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து உதவியற்றோருக்கு மேலும் அருஞ் சேவையாற்ற அருள்புரிந்து ஆசீர்வதிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல கரம்பான் வீரகத்தி விநாயகப் பெருமானைப் பணிந்து பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

சி.றஞ்சன் ஐயா
தலைவர் அவர்களும்
கரம்பான் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், கிராம மக்களும். (17491)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே8

மாவீரர் முதன்மைக் காவலர் கணேசலிங்கம் (அருள்) ஞாபகார்த்தமாக கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிமுதல் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி - தொண்டமனாறு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகம்

இரவு 8.00 மணி - இமையாணன் மத்தியவிளையாட்டுக்கழகம் எதிர் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம்.

(ம-5)

★ ★ ★

வலி.வடக்கு,மே8

யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் சண்டிலிப்பாய் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.(ம-5-86)

★ ★ ★

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் 16 வயதிற்குட்பட்டோருக்கான அஸ்ரா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்).

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி (ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில்).

(ம-5)




## இரண்டாவது உலக இந்து மாநாடு - 2003
### காசி விநாயகர் தேவஸ்தானம் - தெல்லிப்பழை

இந்து மாநாட்டை முன்னிட்டு பாலர் ஞானோதய சபையின் அறநெறிப் பாடசாலையினரால் இன்று (08.05.2003) வியாழக்கிழமை 3 மணியளவில் காசி விநாயகர் தேவஸ்தானத்திலே விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. விசேட ஆராதனைகள், புராணபடனம், கூட்டுப் பிரார்த்தனை, இசைநிகழ்வுகள், பெரியார்களின் சிறப்புரைகள் முதலியன இடம்பெறும். அடியார்கள் அனைவரும் சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பா.ஞா.சபை,
நிர்வாகத்தினர்.

*தெல்லிப்பழை.* (17667)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்

இந்து கலாசார அமைச்சு நடத்தும்
2ஆவது உலக இந்து மாநாடு சிறப்பாக நடைபெறவும்
மேன்மைகொள் சைவ நீதி தழைத்து
இந்து தர்மம் வளர்ந்து ஓங்கவும் எமது வாழ்த்துகள்!

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவு சங்கம். (C/27782)

*இரண்டாவது உலக இந்துமாநாட்டையொட்டி இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஆதரவுடன்*

### இளங்கலைஞர் மன்றம் நடத்தும்
## கலாசாரப் பெருவிழா - 08.05.2003

| | |
|---|---|
| மங்கள இசை | - திரு.M.சிவசுப்பிரமணியம் |
| இறைவணக்கம் | - செல்வி சுகன்யா சிவானந்தன் |
| வரவேற்புரை | - திரு. சு.பாலசண்முகநாதன் |
| தலைவர் உரை | - கவிஞர் சோ.பத்மநாதன் |
| ஆசி உரையும் சொற்பொழிவும் | - அருட்கவி சீ.விநாசித்தம்பி(M.A.) |
| திருமுறை அரங்கு | - திருமதி யசோதா ஸ்ரீகுமார் |
| | - செல்வி சந்திரிகா கணேஸ்வரன் |
| வயலின் இசை | - திரு.அ.ஜெயராமன் |
| சிறப்பு உரை | - முனைவர் கலாநிதி இரா.செல்வக்கணபதி (சென்னை) (விடயம் : சைவமும் இளைஞர்களும்) |
| நாட்டியாஞ்சலி | - நாட்டியக் கலைமணி ஜனீத்திரா சோமசூரியசிங்கம் |
| சிறப்புரை | - பிரதம விருந்தினர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் (நா.உ.) அவர்கள் (இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு) |
| இசைக்கச்சேரி | - செல்வி பரமேஸ்வரி கணேசன் |
| கவியரங்கு | - மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் தலைமையில். |
| வில்லிசை | - கொடிகாமம் திரு. A.V.மூர்த்தி குழுவினர் 'ஸ்ரீவள்ளி' |

- மேற்படி மன்றத்தினர்.

(17681)

## கேள்வி அறிவித்தல்
### மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 28.05.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விகாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொடர் இல. | பாடசாலையின் பெயரும் விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம் ஆண்கள், பெண்கள் விடுதி திருத்தம் | 750/- | 21,000/- |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் தரம் எம். 7ஆம் தரமும் அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவுசெய்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

02. கேள்விப்பத்திரம் வழங்கல் 2003.05.08ஆம் திகதியிலிருந்து 2003.05.20ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முடிவடையும்.

03. இவ்வேலைக்கு அமைவான கேள்விப் பணத்தை குறித்த காலத்துக்குள் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைப்புச்செய்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கட்டட மதிப்பீட்டு அறிக்கையின் இருபத்திரங்களில் ஒன்று மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொண்டு எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த ஆவணங்களைப் பூர்த்தி செய்து தேவையான இடங்களில் ஒப்பந்தகாரர் இறப்பர் முத்திரையும் அவரது கையொப்பமும் எழுதப்பட்டிருக்கவேண்டும். மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் பிரதியை தனியாக வேறு ஒரு கடித உறையிலும் இட்டு, ஒட்டப்படல் வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் வேலையின் விவரம் அத்துடன் மூலப்பிரதி இணைப்புப் பிரதி என எழுதப்படல் வேண்டும். இரண்டு கடித உறைகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு, ஒட்டப்பட்டு மேல் மூலையில் வேலை விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டுத் *தலைவர், கேள்விச் சபை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்* என முகவரியிட்டு இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் 28.05.2003ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். குறித்த நேரத்துக்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆவணங்கள் சரியாக நிரப்பப்படாத, சரியாக இணைக்கப்படாத, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

பெறுமதி சேர் வரி (Vat) 10% தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கொடுப்பனவு கணிப்பீடுகள் சேர்த்துக்கொள்ளப்படும். தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்த காலத்திலிருந்து நான்கு (04) மாதத்துக்குள் வேலையைப் பூர்த்திசெய்து ஒப்படைக்கவேண்டும். எதுவித காலதாமதமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களை தீவக வலய பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

06.05.2003

திருமதி செ.மகாலிங்கம்,
கேள்விச் சபைத் தலைவர்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(C/27783)

# பிரதமர் ரணிலின் உரைக்குப்பின் உறங்கிய சபையை உசுப்பிவிட்ட உள்ளாடைச் சர்ச்சை

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எப்போதுமே அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்கள் தெரியாது. அதனால தான் பெண்களின் உள்ளாடைகளைப் பற்றி விமர்சனம் செய்கின்றனர். இவரைப் போய் கலாநிதி என்று கூறுவது வெட்கக் கேடானது. பெண்களின் உள்ளாடையை மட்டும்தான் இந்த மனிதர் பார்க்கின்றார். மேலாடைகளைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகமவை மிகவும் கடுமையாக விமர்சித்தார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

நேற்றுமுன்தினம் காலை முதல் தூங்கி வழிந்து கொண்டிருந்த சபையை பிற்பகலில் தட்டி எழுப்பினார் அமைச்சர் அஸ்வர்.

ஒரு மாத கால இடைவெளிக்குப் பின் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் கூடியது. சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, சபை அமர்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

வழமையான ஆரம்ப நடவடிக்கைகளுக்குப் பின்னர், சபாநாயகரிடம் அனுமதி பெற்று பிரதமர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதியமை, அந்தக் கடிதத்துக்குப் பிரதமர் பதில் அனுப்பியமை மற்றும் இன்றைய நிலைமை ஆகியவை தொடர்பாகவே பிரதமர் அறிக்கை சமர்ப்பித்து உரைநிகழ்த்தினார்.

அரசு மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுக்கள் ஒரு போதும் முறிவடையமாட்டா. புலிகள் நிச்சயமாக சமாதானப் பேச்சுக்களில் மீண்டும் கலந்து கொள்வார்கள் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

அரசின் நிலைப்பாட்டையும் இதுவரை காணப்பட்டுள்ள முன்னேற்றங்களையும், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக சர்வதேச சமூகமும் ஆர்வத்துடன் செயற்படுவதையும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதையும் பிரதமர் தனது உரையில் தெளிவுபடுத்தினார்.

ஜே.வி.பியினர் உட்பட எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் பிரதமரின் உரையை அவதானமாகவே கேட்டுக்கொண்டிருந்தனர்.

பிரதமர் உரையாற்றியபின், எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் உரைமீது விவாதம் ஒன்றை நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது என்று தெரிவித்து, அன்றைய 'தினத்தில் ஈ.பி டி.பி. உறுப்பினர்கள் கொலை செய்யப்படுதல், பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மூதூர் அசம்பாவிதங்கள் ஆகியவை தொடர்பாகவும் விவாதிக்க இடமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்சவும் சபாநாயகரின் அனுமதியுடன் விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.



நாடாளுமன்றிலிருந்து...

ஏதாவது புதிய விடயங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கிடைத்தது ஏமாற்றம் தான்.

வழமைப்பிரகாரம் புலிகள் மீதும் அரசின் மீதும் குறைகூறிக்கண்டனம் தெரிவித்தார் விமல் வீரவன்ச.

இதைத் தொடர்ந்து நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம் லொக்கு பண்டார 'மத்தியஸ்த விசேட பிணக்குள் சட்டவரைவை சபையில் சமர்ப்பித்தார்.

பிரதமரின் உரையின் பின் நாடாளுமன்றத்தின் இருபக்க ஆசனங்களும் காலியாகிவிட்டன. இதனால், இந்த சட்டவரைவு மீதான விவாதமும் சலசலப்பின்றியே நடைபெற்றது. பேசிய உறுப்பினர்கள் அனைவரும் நாற்காலிகளைப் பார்த்தே பேசவேண்டியதாகி விட்டது. அதனால் குறுக்கீடுகளும் இல்லை; கூச்சல்களும் இல்லை.

என்றாலும் மதிய உணவு இடைவேளையின் பின், அமைச்சர் அஸ்வர் சபைக்குத் தெம்பூட்டினார்.

இணக்க சபைகள் மூலம் நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும ஏற்படுத்த முடியும் என்று குறிப்பிட்ட அமைச்சர், இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் 'தர்மத்தின் வழியில் சமாதானம்' வேண்டி இரண்டாவது உலக இந்து மாநாட்டை சிறப்பாக நடத்தினார் என்று கூறி, அவரைப் பெரிதும் பாராட்டினார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்றி மேதினத்தை புதுமையான முறையில் கொண்டாடியதையும் குறிப்பிட்டார். பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் கொழும்பில் கூடி மகிழ்ந்ததையும் அவர்கள் நியாய விலையில் பொருள்களை வாங்கிச் சென்றதையும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம, "ஆமாம் ஆமாம் மலிவு விலையில் உள்ளாடைகளை வாங்கிச் சென்றனர்" என்றார். இந்தச் சந்தர்ப்பத்திலேயே கலாநிதி அமுனுகமவுக்கும் அமைச்சர் அஸ்வருக்கும் இடையில் பலத்த மோதல்கள் ஏற்பட்டன.

கடந்த ஆட்சிக்காலத்தில் கொழும்புக்குவரவே மக்கள் அஞ்சினர். வீதிகள் எல்லாம் தடை. இப்போது பாதைகள் எல்லாம் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் வருகின்றனர். நீங்கள் மூடிவைத்தீகள் நாங்கள் திறந்து விட்டுள்ளோம என்றார் அமைச்சர் அஸ்வர்.

இந்தவேளையில் கலாநிதி அமுனுகமவுக்கும் அமைச்சர் அஸ்வருக்கும் இடையில் மீண்டும் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. அமைச்சர் அஸ்வர் விவாதத்திற்குத் தொடர்பு இல்லாத விடயங்களைப் பேசுகின்றார் என ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கிளப்பினார் சரத் அமுனுகம.

அதற்கு இடமளிக்காமல் அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

ஒழுங்குப் பிரச்சினை ஒன்று எழுப்பப்படும் போது பேசும் உறுப்பினர் ஆசனத்தில் அமர வேண்டும். ஆனால், அமைச்சர் அஸ்வர் அமர மறுக்கின்றார் எனக் குற்றஞ்சாட்டினார் சரத் அமுனுகம.

எனினும், அமைச்சர் அமர மறுத்து விட்டார். இதனால், சபையில் சூடு பறந்தது. அப்போது குறிக்கிட்ட கம்பஹா மாவட்ட எம்.பி.ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தாமும் ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதாகக் கூறி, "இந்தச் சபையில் மூன்று பெண் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களில் எவருடைய உள்ளாடையை (அவர்) பார்த்தார்" என்று கேட்டுவிட்டு அமர்ந்து கொண்டார்.

அப்போது சபையில் கொல்லெனச் சிரிப்பொலிகள் எழுந்தன. காரசாரமான விவாதம் கலகலப்பாக முடிந்தது. நீதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட மத்தியஸ்த விசேட பிணக்குகள் சட்டம் எந்தவிதமான எதிர்ப்புகளும் இன்றி எல்லாநிலைகளிலும் அங்கீகரிக்கப்பட்டது.

முன்னாள் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய விவகார, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் செல்லையா இராசதுரை நேற்றுமுன்தினம் காலை சபாநாயகர் கலரியில் இருந்து சபை அமர்வுகளை அவதானித்துக் கொண்டிருந்தார்.

(ம)

# மத்தியஸ்த சபைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு அதனால் நீதிமன்றங்களில் இனிமேல் வழக்குகள் குறையும்

## சட்டமூலத்தைச் சமர்ப்பித்து நீதி அமைச்சர் லொக்கு பண்டார உரை

கொழும்பு,மே.8

மத்தியஸ்த சபைகள் ஊடாக சாதாரண பிணக்குகளைத் தீர்ப்பதன் மூலம் நீதிமன்றங்களுக்கு வரும் வழக்குகளைக் குறைக்கலாம் என்று நீதி, மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மத்தியஸ்த விசேட பிணக்குகள் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்குகளுக்காக சிலர் வகூலாகவேண்டிய தொகையை விடப் பல மடங்கு செலவிடும் நிலை இருககிறது.

தொழில் பிணக்குகள் தொடர்பான வழக்குகள் இன்று பெருந்தொகையாக நதிமன்றங்களின் முன்னால இருக்கின்றன. மத்தியஸ்த சபையின் தொழில் பிணக்குகளை இலகுவாகத் தீர்க்க முடியும். இதனால், நீதிமன்றங்களில் வேலைப்பளுவும் வெகுவாகக் குறையும்.

இந்தச் சட்ட மூலத்தை எதிர்த்து எந்தவொரு சட்டத்தரணியும் நீதிமன்றம் செல்லவில்லை. இதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

விவாதத்தில் அமைச்சர் அஸ்வர் பேசுகையில் -

மத்தியஸ்த சபைகள் கிழக்கில் பள்ளிவாசல்களில் முன்னர் நடைபெற்றன. ஊரில் ஏற்படும் பிணக்குகள் இந்தப் பள்ளிவாசல்களில் தீர்த்து வைகக்கப்படும் - என்றார்.

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பேசுகையில் -

மத்தியஸ்த சபைகள் காலத்தின் தேவையாகும். அவ்வப்போது மத்தியஸ்த சபைகள் அமைக்கப்பட்டாலும அவை பின்னர் முறையாக இயங்கவில்லை. எனவே, இவற்றை முறையாக இயங்கச்செய்ய வேண்டும். வடக்கு - கிழக்கிலும் மத்தியஸ்த சபைகள் அமைக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

என்.ரவிராஜ் பேசுகையில் -

வடக்கு - கிழக்கு மாகாணங்களில யுத்த காலத்தில் அழிக்கப்பட்டுள்ள அனைத்து நீதிமன்றங்களும் புனரமைக்கப்பட வேண்டும். அவற்றிற்குத தேவையான தளபாட உபகரணங்களையும் வழங்க வேண்டும். எமது பிரதேசத்தில் தனியாருக்குச் சொந்தமான வீடுகளிலேயே நீதிமன்றங்கள் இயங்குகின்றன. நீதிவான்கள் ஆசனம் இன்றி வாங்குகளில் அமர்ந்து வழக்குகளை நடத்துகின்றனர். எனவே, அரசு இவ்விடயத்தில் கூடுதல் அக்கறை காட்டவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

(ம)

# அனர்த்தங்களால் அல்லற்படுவோருக்கு ஆதரவுக்கரம் நீட்டும் செஞ்சிலுவை

உலக செஞ்சிலுவை, செம்பிறை தினம் இன்றாகும். அதனை ஒட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

1828ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ற் (Henry Dunant) என்பவர் தான் நேரில் பார்த்து அனுபவித்த யுத்த அவலங்களைக் கருத்திற்கொண்டு, யுத்தத்தில் காயப்படுவோரைப் பாதுகாக்கவும், இயற்கை அனர்த்தங்களினால் அல்லல் படுபவர்களுக்குக் கைகொடுக்கவும் ஆர்வமுற்று தனிமனித முயற்சியினால் முதலில் சிறியதொரு குழுவை உருவாக்கிப் பணியாற்றத் தொடங்கினார்.

உலகிலே பெரு விருட்சமாக வியாபித்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கம் உருவாவதற்கு காரணமாயிருந்தது, 1859இல் சொல்பரினோ என்ற கிராமத்தில் இத்தாலிக்கும், பிரான்ஸுக்குமிடையில் நடந்த யுத்தமாகும். யுத்தத்தை நேரில் கண்ணுற்ற டுனாற் அந்த நேரத்தில் அவ்வேளையிலிருந்தே கடினமாகச் செயற்பட ஆரம்பித்ததன் பலாபலனே இவ்வமைப்பின் தோற்றமாகும். யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிப்புறுவோரைக் காப்பாற்ற வேண்டுமென்ற இவரது கனவு இந்த இயக்கம் ஆரம்பித்ததன் மூலம் நனவாகியது.

'சொல் பரினோவின் அனுபவங்கள்' என்ற புத்தகத்தின் மூலம் தான் கண்ட யுத்த அனுபவங்களை 1862இல் விளக்கிய டுனான்ற் தன்னுடன் மேலும் நான்கு ஜெனிவா பிரஜைகளையும் இணைத்து ஒரு குழுவாக இயங்கினார். பின்னர் இக்குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாகப் பரிணமித்தது 1876ஆம் ஆண்டிலாகும். தற்சமயம் உபயோகிக்கப்படும் சின்னம் 1864இல் தெரிவு செய்யப்பட்டது. இச்சின்னம் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவையாகும். அரேபிய நாடுகளில் செம்பிறைச் சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செஞ்சிலுவைச் சின்னத்தை தற்போது பல மட்டங்களிலும் பல இடங்களில் பொருத்தமற்ற முறையில் உபயோகிப்பதன் மூலம் பலர் இச்சின்னத்தின் உன்னத தன்மையினை உணராதவர்களாக இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் இது விடயமாகத் தமது அங்கத்துவ நாடுகளோடு தொடர்புகொண்டு பொருத்தமற்ற முறையில் சின்னத்தை உபயோகிப்பதைத் தடுக்கும் நோக்கில் சட்டம் இயற்றுமாறு கேட்டுள்ளது. அங்கத்துவ நாடுகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

செஞ்சிலுவை இயக்கமானது மூன்று பிரிவினர்களைக் கொண்டுள்ளன. அவையாவன:-

★ தேசிய சங்கம் (National society) - தேசிய சங்கம் எனப்படு



கென்றி டுனான்ட்

வது அந்தந்த நாடுகளில் இயங்கும் செஞ்சிலுவைச்சங்கம் - எமது நாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.

★ செஞ்சிலுவை, செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் (International Feneratio of Red Cross / Cresent - I.F.R.C. ஜெனிவாவில் தாயகமாக இயங்குகின்றது. தேசிய சங்கங்களுக்கு மிகவும் உதவும் கரங்களாக திகழ்கின்றனர்.

★ செஞ்சிலுவை சர்வதேசக்குழு (International Committee of Red Cross - I.C.R.C) - ஜெனிவாவில் தலைமை காரியாலயத்தை கொண்டு இயங்குகிறது. யுத்தம் அல்லது இயற்கை அனர்த்தம் நடக்கும் நாடுகளின் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுவதுடன் தேசிய சங்கங்களுக்கும் உதவுகின்றது.

ஒரு நாட்டில் ஒரு தேசிய சங்கமே (One National Society) இயங்க முடியும். ஆனால், தேவைக்கு ஏற்ப கிளைகளை ஸ்தாபித்து இயங்கலாம். அதற்காக யாப்பு ரீதியாக அங்கீகாரம் அங்கத்தவர்களிடம் பெறப்பட வேண்டும். எமது நாட்டில் சகல மாவட்டங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டு இயங்குவதனால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாக சேவையாற்ற முடிகிறது.

குறிப்பாக, யுத்த மேகத்தில் சிக்கி அல்லற்பட்ட மக்களுக்குத் தேவையறிந்து சேவையாற்ற முடிந்தது. யாப்பு ரீதியாக பிரிவுகள் தோறும் செஞ்சிலுவைச்சங்க செயற்பாடுகளைச் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மட்டத்திலேயே செஞ்சிலுவை அமைப்பைத் தோற்றுவித்து செயற்படவும், அங்கத்தவர்களை அதிகமாக இணைக்கவும் பூகோள ரீதியான அலகுகளை ஸ்தாபிக்கவும் யாப்பு அங்கீகாரம் பெறப்பட்டு செயற்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 14பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக செஞ்சிலுவை அலுவலகம் அமைத்து செயற்படுத்தப்படுகின்றது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு யாழ்.மாவட்டத்தில் ஆற்றும் பணிகளில் சில பின்வருமாறு:-

★ மோதல் நடைபெறும் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மற்றும் காயமடைந்தோர், கைது செய்யப்பட்டோர் ஆகியோருடன் கௌரவத்தோடு நடந்துகொள்ள வேண்டியது பற்றி போரில் ஈடுபடுபவர்களுக்கு நினைவூட்டி வருதல்.

★ கலவரங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு, சிறையில் உள்ளோரைப் பார்வையிட்டு வருகின்றனர். கைதிகள் காணாமல் போதல், அவர்களுக்கு துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதைகள் இடம்பெறுதல் போன்றவற்றைத் தடுக்க இப்பார்வையிடல்கள் உதவுகின்றன.

★ மோதல்கள் நடைபெறுகின்ற போது ஏற்படும் சுகாதார சீர்கேடுகளைக் கருத்திற்கொண்டு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல்.

**தி.உதயசூரியன்**
உபதலைவர்,
இ. செ. கி. சங்கம்,
யாழ். கிளை.

★இடம்பெயர்ந்த வேளைகளிலும், மீள்குடியேறும் போதும் உணவு, குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்தலும், ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் வழங்கலும்.

★ போரில் ஈடுபடுவோருக்கு பொது மக்கள் மற்றும் காயமடைந்தோர், கைது செய்யப்பட்டோருடன் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகளை வழங்குவதுடன், தமது கொள்கைகள், பணிகள் பற்றியும் விளக்குகின்றது.

★ தேசிய சங்கம் மூலமாக தமது சில பணிகளை முன்னெடுத்தல்.

2ஆவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு
**கைதடி நுணாவில் ஞானவைரவர் ஆலயத்தில் விசேட நிகழ்ச்சிகள்**

இன்று (08.05.2003) வியாழக்கிழமை காலை ஞானவைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதன் பின்னர் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி.  (17662)  ஆலயத்தினர்.

---


**குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை!**

உலகெங்கிலும் வாழும் உங்கள் உறவினர்களுடன் உரையாடி மகிழ வேண்டுமா?



கவலையை விடுங்கள்

உடனே விஜயஞ் செய்யுங்கள்:-

☆ மிக மிகக் குறைந்த கட்டணம்
☆ உங்கள் தொடர்புகளுக்கு ரூபா 10/-மட்டுமே!
☆ தொலைபேசி வசதி உள்ளவர்கள் உங்களது இல்லங்களில் இருந்தபடியே எமது இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைத் தொடர்பு நிலையங்களுக்கு விசேட கட்டணத்தில் இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள் (Connecting Calls) வழங்கப்படும்.

**அருள் கொமினிக்கேஷன்**
**இல.01, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**
T.P .No:- 021 222 3536, 021 222 3615  (17651)


---

**முக்கிய அறிவித்தல்**

கணக்கீட்டு ஆசிரியர்
திரு. பாலவாசனின்

அனைத்து வகுப்புக்களும்
**10-5-2003**
சனிக்கிழமையிலிருந்து தொடர்ந்து வழமையான நேரப்படி நடைபெறும்.

இயக்குநர்,
விக்னா
கல்வி நிறுவனம்.

---

**தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை - 07**

விடயம்
தமிழ்த்திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்

உரை வழங்குபவர்
திரு அ. யேசுராசா
(எழுத்தாளர் - விமர்சகர்)

காலம்: 08.05.2003 வியாழன்
நேரம்: பி.ப. 3.45
இடம்: புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை.

**உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

(17660)  தனிநாயகம் தமிழ்மன்றம்.

---



**யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில்**

**2 ஆவது உலக இந்து மாநாடு**
**விசேட பூசையும் அன்னதான நிகழ்வும்**

நாளை (09.05.2003) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகங்கள், பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நல்லூர் பஜனைக் குழுவினரின் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு உச்சிக்காலப் பூசையைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வு நடைபெறும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

(17649)  -ஆலய நிர்வாகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:- லலிதா ஜூவல்லரி
213 - B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2863,  077 110107

---

**இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்**
**மின்தடை பற்றிய அறிவித்தல்**

கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினத்தில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 10.05.2003 காலை 9.00 - பி.ப. 4.00 | 01. புன்னாலைக் கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி. |
| | 02. சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
(c/27750)  இலங்கை மின்சார சபை

---

உ
தேவி துணை

# தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
## தரும பரிபாலன சபை
**Thumpalai Nellandai Amman Temple Board of Trustees**

தும்பளை, Thumpalai
ஸ்தாபிதம் / ESTD } 31-05-1945
பதிவு இல / Regd No } HA/5/JA/419
பருத்தித்துறை, Point Pedro.
2003.05.06

(தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், தும்பளை முருகன் கோவில், தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் ஆகிய மூன்று கோவில்களையும் பரிபாலனஞ்செய்யும் சபை)

| சபா.இரவீந்திரன் (சட்டத்தரணி) | வை.சண்முகவடிவேலு | சி.தங்கவடிவேலு |
|---|---|---|
| தலைவர்/President | செயலாளர்/Secretary | பொருளாளர்/Treasurer |

# அறிவித்தல்

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் 2003.05.04ஆம் திகதி நடைபெற்று, கீழ் பெயர் குறிப்பிடப்பட்டோர் 2003/2004 வருட நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## நிர்வாகசபை 2003/2004 வருட உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.சபா இரவீந்திரன் (சட்டத்தரணி) |
| உபதலைவர்கள் | :- | (அம்பாள்) திரு.ஆ.நவரத்தினசாமி |
| | | (முத்துமாரி) திரு.சி.வல்லிபுரம் |
| | | (முருகன்) திரு.வி.சேதுநாயகம் |
| செயலாளர் | :- | திரு. வை. சண்முகவடிவேல் |
| உபசெயலாளர் | :- | திரு. கா. புஸ்பராசா |
| பொருளாளர் | :- | திரு. சி. தங்கவடிவேலு |
| உபபொருளாளர் | :- | திரு. வே. திருஞானசம்பந்தர் |
| முகாமையாளர் | :- | (அம்பாள்) திரு.ச. வீரகத்திப்பிள்ளை |
| | | (முத்துமாரி) திரு.பி.மார்க்கண்டு |
| | | (முருகன்) திரு. பா. கோபிதாஸ் |
| கௌரவ உறுப்பினர்கள்:- | | 1. திரு. க. பாலசுந்தரம் |
| | | 2. திரு. க. சற்குணம் |
| | | 3. திரு. ஆ. சிவகுமார் |
| | | 4. திரு. து. சிறீகாந் |
| கணக்குப் பரிசோதகர் | :- | திரு. ஆ. கனகசபை |
| சட்ட ஆலோசகர் | :- | திரு. விநாயகமூர்த்தி இராமக்கமலன் (சட்டத்தரணி) |

விசேட பூசை மற்றும் நேர்த்திக்கடன் செய்யவிரும்பும் அடியார்கள் ஆலய உபதலைவர் திரு ஆ. நவரத்தினசாமி, ஆலய முகாமையாளர் திரு ச. வீரகத்திப்பிள்ளை ஆகியோருடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றார்கள். அடியார்களுடைய விருப்பங்கள் பூரணமாகவும் திருப்திகரமாகவும் நிறைவேறுவதற்கும் ஆலய வளர்ச்சி இடம்பெறுவதற்கும் இது உதவும் என்று அறியத்தருகின்றோம்.

பின்குறிப்பு: தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்தப் பொங்கல் 2003.05.16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். விளக்கு வைப்பு வைபவம் 2003.05.09ஆம் திகதி வெள்ளிக்கிழமை உதயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறும்.

வை.சண்முகவடிவேலு (செயலாளர்)  தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலனசபை  (17655)

---

**33ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மலர்வு 1939 - 09 - 03  மறைவு 2003 - 04 - 06



**அமரர் துரைசிங்கம் செந்தில்நாதன்**
(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திர இயக்குநர்)

06-04-2003 அன்று சிவபதமடைந்த துரைசிங்கம் செந்தில்நாதன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தியை நேரிலும், வேறு வழிகளிலும் செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (08-05-2003) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி :- கிருபாமலர்
பிள்ளைகள் :- விஜிதா, அமரர் விஜிதரன் (பாபு) செந்தூரன், துவாரகா,
தாய் :- தெய்வானைப்பிள்ளை.

கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை.

---

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகலிங்கம் அரவிந்தமலர்**

அச்சுவேலி தெற்கு, பயித்தோலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் அரவிந்தமலர் நேற்று (7-5-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பாலகுமார்(லண்டன்), பாமினி, ரவிக்குமார்(சூழகவியல் மாணவன், 4ஆம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்), சசிக்குமார்(பிரான்ஸ்), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலநாதன்(ஆய்வு கூட உதவியாளர், யாழ். மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும் (ஜெயமலர், திருவருள்நாதன்(சுவிஸ்), இலட்சியநாதன், சேவருள்(சுவிஸ்), காலஞ்சென்ற தனமலர் மற்றும் சிவகரன் (கனடா), இரவீந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தபாலசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனியும் அனுராதா, இரவீந்திரன்(சுவிஸ்), கீதா(கனடா), சுரேந்திரன் (டென்மார்க்), குகனேந்திரன்(சுவிஸ்), சுஜாதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமுதா(சுவிஸ்), கிரிஜாதேவி (சுவிஸ்), கீதா(கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07-05-2003) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி முழுக்கன் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா கிருபாநிதி (சகோதரன்)
ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (17647)